



ISSN: 2582-5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351







வெள்ளி ❖ பிப்ரவரி. 02, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 115 ❖ ரூ.10

### இந்தியப் பொருளாதாரம் ஆழமான நேர்மறையான மாற்றத்தைக் கண்டுள்ளது

# பட்ஜெட்

## வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்கள், ஏழைகள், பெண்கள், விவசாயிகள் எனும் 4 முக்கிய தூண்களுக்கு இந்த பட்ஜெட் அதிகாரம் அளித்துள்ளது; பிரதமர் மோடி

புதுடெல்லி , பிப். 2-

**மத்திய இடைக்கால பட்ஜெட் 2024 நேற்று தாக்கல் செய்யப்பட்டது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் காலை 11மணியளவில்பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இந்தியப் பொருளாதாரம் கடந்த 10 ஆண்டுகளில் ஆழமான நேர்மறையான மாற்றத்தைக் கண்டுள்ளது என்றும், விலைவாசி - பணவீக்கம் கட்டுக்குள் உள்ளது என்றும் அவர் பட்டியலிட்டார். அதன்பிறகு பட்ஜெட் குறித்து கருத்து தெரிவித்த பிரதமர் மோடி, "இந்த பட்ஜெட் அனைவரையும் உள்ளடக்கியது; புதுமைகள் நிறைந்தது. தொடர்ச்சிக்கான நம்பிக்கையை இது அளித்துள்ளது" என்று பெருமிதம் தெரிவித்தார். ஆனால், எதிர்க்கட்சிகள் மத்திய இடைக்காக பட்ஜெட்டை வெகுவாக விமர்சித்துள்ளன.**



இந்த பட்ஜெட்டில், ஒரு ரூபாயில் வரவு - செலவு குறித்த விவரம் வருமாறு: நாட்டின் வருவாயில் ஒவ்வொரு ரூபாயிலும், 63 காசுகள் நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலம் கிடைக்கின்றன. கடன்கள் மற்றும் பிற சொத்துகள் மூலமாக 28 காசுகள் கிடைக்கின்றன. பங்கு விற்பனை போன்ற வரி அல்லாத வருவாயிலிருந்து 7 காசுகள், கடன் அல்லாத வருவாயிலிருந்து 7 காசுகள், கடன் அல்லாத முதலீட்டு வருவாய்மூலம் 1 காசு கிடைக்கிறது.

கார்ப்பரேட் மற்றும் தனிநபர்வருமானவரியை உள்ளடக்கிய நேரடி வரிகளிலிருந்து மட்டும் 36 காசுகள் வரும். அதாவது, வருமான வரி மூலம் 19 காசுகளும், கம்பெனி வரி மூலம் 17 காசுகளும் கிடைக்கும். மறைமுக வரிகளில், சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) மூலம் அதிகபட்சமாக 18 காசுகள் கிடைக்கும். 5 காசுகள் கலால் வரி மூலமாகவும், 4 காசுகள் சுங்க வரி மூலமாகவும் கிடைக்கும் என அரசு எதிர்பார்க்கிறது.

செலவைப் பொருத்தவரை ஒவ்வொரு ரூபாயிலும் அதிகபட்சமாக வட்டி செலுத்துவதற்கு 20 காசுகள் செலவு செய்யப்படுகிறது. இதேபோல் மாநிலங்களின் வரி பகிர்வுக்கும் 20 காசுகள் செலவாகிறது. நாட்டின் பாதுகாப்புக்கான ஒதுக்கீடாக 8 காசுகள் செலவிடப்படுகிறது. மத்தியஅரசுத்துறைகளின் திட்டங்களுக்காக 16 காசுகளும், மத்திய நிதியுதவி திட்டங்களுக்காக 8 காசுகளும் செலவிடப்படும். நிதி ஆணையம் மற்றும் பிற இடமாற்றங்களுக்கான செலவு 8 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மானியம்மற்றும்ஓய்வூதிய திட்டங்களுக்கு முறையே 6 காசுகள் மற்றும் 4 காசுகள் கணக்கில் கொள்ளப்படுகிறது. 9 காசுகள் பிற செலவினங்களுக்கு பயன்படுத்தப்படும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே பட்ஜெட் குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் மோடி, "இந்த பட்ஜெட் அனைவரையும் உள்ளடக்கியது; புதுமைகள் நிறைந்தது. தொடர்ச்சிக்கான நம்பிக்கையை இது அளித்துள்ளது. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்கள், ஏழைகள், பெண்கள், விவசாயிகள் எனும் 4 முக்கிய தூண்களுக்கு இந்தபட்ஜெட் அதிகாரம் அளித்துள்ளது. 2047-க்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உத்தரவாதத்தை இந்த பட்ஜெட் வழங்கி உள்ளது.

இளம் இந்தியாவின் இளைஞர்களின் விருப்பங்களை பிரதிபலிப்பதாக பட்ஜெட் உள்ளது. இந்த பட்ஜெட்டில் இரண்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆய்வு மற்றும் புதுமைகளுக்காக ரூ. 1 லட்சம் கோடி ஒதுக்கப்படும் என இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழைகளுக்காக மேலும் 2 கோடி வீடுகள் கட்டித்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று கோடி பெண் லட்சாதிபதிகளை உருவாக்கநாங்கள்இலக்கு நிர்ணயித்துள்ளோம். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பயன்கள் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களுக்கும் கிடைக்கச்செய்யப்படும். இந்த பட்ஜெட்டில் நிதிபற்றாக்குறை கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல், செலவின மூலதனத்திற்கு ரூ. 11,11,111 கோடி வழங்கப்பட்டுள்ளது. பொருளாதார வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால், இந்திய பொருளாதாரம் இனிப்பான புள்ளியாக உள்ளது. 21ம் நூற்றாண்டுக்கான நவீன உள்கட்டமைப்பை ஏற்படுத்தும் அதே நேரத்தில், இளைஞர்களுக்காக ஏராளமான வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.




▸ தி.மு.கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவைத் தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், நாகப்பட்டினம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம், திருவாரூர், நன்னிலம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகளுடன் அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் எஸ்.ரகுபதி உள்ளிட்டோர் கலந்துக்கொண்டிருந்தனர்.

## மக்களவைத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டி பாமக பொதுக்குழு கூட்டத்தில் முடிவு

சென்னை : பிப். 2-

மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிடாமல் கூட்டணி அமைத்து போட்டியிடுவது என சென்னையில் நடந்த பா.ம.க. சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



சென்னையில் நேற்று பா.ம.க. சிறப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானங்கள் குறித்து அக்கட்சி சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாடாளுமன்ற மக்களவைக்கான தேர்தல் வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தேர்தலுக்கான அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று தெரிகிறது. பாட்டாளி மக்கள் கட்சிக்கு மட்டுமின்றி தமிழ்நாட்டின் நலன்களை பாதுகாப்பதில் இந்தத் தேர்தல் மிகவும் முக்கியமானது என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயல்பாகவே மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயல்படுவதை உறுதி செய்கிறது. அதற்கேற்ற வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் அமைக்கப்பட்டதன் நோக்கம் ஒட்டுமொத்த இந்தியாவின் அரசு நிர்வாகம் எந்த சிக்கலும் இல்லாமல் இயங்க வேண்டும் என்பதுதான். இதை மத்திய, மாநில அரசுகள் புரிந்து கொண்டு செயல்படும் வரை யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை.

ஆனால், கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகவே மாநில அரசுகளின் அதிகாரங்களை மத்திய அரசு பறிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது. நெருக்கடி நிலை காலத்தில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மாநிலப் பட்டியலில் இருந்த 5 பொருட்கள் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டன. அப்போது இது தற்காலிக நடவடிக்கையாகவே பார்க்கப்பட்டது. ஆனால், அதன்பின் அரைநூற்றாண்டு ஆகப்போகும் நிலையில் இன்றுவரை அந்த 5 பொருட்களும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படவில்லை. மத்தியில் ஆட்சி செய்யும் கட்சிகள் மாறினாலும் கூட, மாநில அதிகாரத்தைப் பறிக்கும் போக்கு மட்டும் மாறவே இல்லை.

தமிழ்நாட்டு மாணவர்கள் மீது நீட் தேர்வு திணிக்கப்பட்டதற்கும், தமிழர்கள் தங்களின் வீரத்தின் அடையாளமாகவும், பண்பாட்டுச் சின்னமாகவும் கருதிய ஜல்லிக்கட்டுப் போட்டிகள் தடைசெய்யப்பட்டது ஆகிய அனைத்திற்கும் மாநிலப்பட்டியலில் இருந்த 5 பொருட்கள் மத்தியப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது தான் காரணம் ஆகும். இந்த அநீதிக்கு எதிராக போராடவேண்டியது மாநிலக்கட்சிகளின் கடமை ஆகும். அந்தக் கடமையை பா.ம.க. மிகச்சரியாக நிறைவேற்றி வருகிறது.

நாடாளுமன்ற மக்களவையில் பா.ம.க-வுக்கு போதிய பிரதிநிதித்துவம் இருந்த காலங்களில் எல்லாம் மாநில சுயாட்சி உரிமைக்காகவும், சமூகநீதிக்காகவும் குரல்கொடுத்தும், போராடியும் வந்திருக்கிறது. மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்ததில்முதன்மைகாரணமாக இருந்தது பா.ம.க.வுக்கு உரிய பிரதிநிதித்துவம் இருந்ததுதான்.

மக்களவையில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லாத போதெல்லாம், சமூக நீதிக்கும், தமிழகத்தின் நலன்களுக்கும் பின்னடைவு ஏற்பட்டு வந்திருக்கிறது. இந்த உண்மைகள் சொல்லும் பாடம் என்னவெனில், மக்களவைத் தேர்தல்களில் பா.ம.க.வின் வெற்றி தமிழ்நாட்டின் நன்மை என்பதுதான். அதனால்தான் 2024 மக்களவைத் தேர்தலில் கணிசமான இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து, அதற்கான உத்திகளை வகுத்து பாட்டாளி மக்கள் கட்சி செயல்பட்டு வருகிறது.

அதன் ஒருகட்டமாக, 2024 மக்களவைத் தேர்தலில் மாநில நலனிலும், தேசிய நலனிலும் அக்கறை கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட பாட்டாளி மக்கள் கட்சியின் சிறப்புப் பொதுக்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது. எந்தெந்த கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது என்பது குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை கட்சியின் நிறுவனர் ராமதாஸுக்கு அதிகாரத்தை வழங்குகிறது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டப்பேரவையில் பிப்.12-ல் ஆளுநர் உரை பிப்.19-ல் தமிழக பட்ஜெட் தாக்கல்

சென்னை , பிப். 2-

**தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி உரையுடன் வரும் பிப்ரவரி 12-ம் தேதி தமிழக பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கும் என்று தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு கூறியுள்ளார். 2024-25-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரும் 19-ம் தேதி நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் கூறினார்.**



சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவு நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 174/1-ன் கீழ், தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தினை, வரும் பிப்.12-ம் தேதி, காலை 10 மணிக்கு கூட்டியுள்ளார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 176/1-ன் கீழ், அந்த கூட்டத்தில், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி. உரை நிகழ்த்துகிறார். மேலும், தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, 2024-25ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரும் 19-ம் தேதியன்று தாக்கல் செய்யவுள்ளார்.

தொடர்ந்து, பிப்.20ம் தேதி, 2024-25ம் ஆண்டுக்கான முன்பண மானியக் கோரிக்கையினையும், வரும் 21-ம் தேதி 2023-24 ஆண்டுக்கான கூடுதல் செலவின மானியக் கோரிக்கையினையும் தாக்கல் செய்யவுள்ளார், என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கை பிரச்சினை தொடர்பான நீதிமன்ற வழக்கு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "நீதிமன்றம் சட்டப்பேரவை, சட்டப்பேரவைத் தலைவரை கட்டுப்படுத்தாது. அவர்கள்தொடர்ந்துள்ள வழக்கில், நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்குகிறதோ, அது வேறு விஷயம். ஆனால், சட்டப்பேரவைக்குள் ஒரு உறுப்பினரை எங்கு அமரவைக்க வேண்டும் என்பது தொடர்பான முழு உரிமையும், சட்டப்பேரவைத் தலைவருக்குத்தான் உண்டு என, நானும் கூறுகிறேன். இதற்கு முன்பு சபாநாயகராக இருந்த தனபாலும், சட்டமன்றத்திலேயே வெளிப்படையாக கூறியுள்ளார்" என்று அவர் தெரிவித்தார்.

## "1.5 லட்சம் பேர் வேலையில்லாமல் உள்ளனர்" மத்திய அரசின் 'அக்னிபாத்' திட்டத்தை சாடிய ராகுல் காந்தி

டெல்லி : பிப். 2-

"அக்னிபாத் திட்டம் தேசபக்தியுள்ள இளைஞர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள துரோகம் மட்டுமல்ல இந்திய ராணுவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நாட்டின் புனிதமான உணர்வுகளுக்கு இழைக்கும் துரோகம்" என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.




இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில், "ஆயுதப்படையில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 1.5 லட்சம் இளைஞர்களை தற்காலிக ஆள்சேர்ப்பு அக்னிபாத் திட்டம் என்ற பெயரில் ஆதரவற்றவர்களாக விடப்பட்டுள்ளது அவர்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகும். அக்னிபத் திட்டம் தேசபக்தியுள்ள இளைஞர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள துரோகம் மட்டுமல்ல இந்திய ராணுவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நாட்டின் புனிதமான உணர்வுகளுக்கு இழைக்கும் துரோகம்"எனப்பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, பிஹார் மாநிலம், கதிகாரில் நேற்று முன்தினம் புதன்கிழமை தனது இந்திய ஒற்றுமை நீதி நடைபயணத்தின் போது ராணுவத்தில் சேர ஆர்வமுள்ள இளைஞர்களுடன் கலந்துரையாடலின் போது, "கடந்த 40-50 ஆண்டுகளில் வேலையின்மை விகிதம் அதிகமாக இருந்ததால் நாட்டில் பரவலாக வேலையில்லா திண்டாட்டம் நிலவுகிறது" என்று தெரிவித்தார். பிஹாரில் இருந்து மேற்குவங்கம் திரும்பிய அவருக்கு மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ராணுவத்தில் இளைஞர்கள் தற்காலிகமாக பணி நியமனம் செய்யும் திட்டமாகவே இது கொண்டுவரப்பட்டது. அதாவது அக்னிபாத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் இளைஞர்கள் ராணுவத்தில் நான்கு ஆண்டுகளுக்கு மட்டும் பணி செய்ய முடியும். 4 ஆண்டுகள் பணிக்காலம் முடிந்த பிறகு அவர்களுக்கு சேவை நிதி தொகுப்பு வழங்கப்படும். 17.5 வயதில் இருந்து 23 வயதுக்குள் இருப்பவர்கள் இத்திட்டத்தில் சேர முடியும். நான்கு ஆண்டுகளுக்கு பிறகு மதிப்பீடுகள் செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் 25 சதவீதம் பேர் ராணுவத்தில் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள். அக்னிபாத் திட்டத்தின் கீழ் தேர்வாகும் இளைஞர்கள் அக்னிவீரர்கள் என அழைக்கப்படுவார்கள்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

மனிதனுக்கு எந்த அளவு
அறிவு இருக்கிறதோ
அதே அளவு
முட்டாள்தனமும் அவன்
மூலையில் எங்கோ
ஒரிடத்தில் இருக்கிறது

புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்



ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்

தங்க நகை தயாரிப்பாளர்கள்

TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,850 | Rs. 6,320 |


# அரியலூரில் காடுவெட்டி குரு 62–வது பிறந்தநாளை முன்னிட்டு பாமக சார்பில் அன்னதானம்

அரியலூர் : பிப். 2–

அரியலூரில் பாட்டாளி மக்கள்கட்சிசார்பில்காடுவெட்டி குரு 62-வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம் நடைபெற்றது.

ஜெயங்கொண்டம் பாமக முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில வன்னியர் சங்க தலைவருமான, மறைந்த காடுவெட்டி குரு 62-வது பிறந்தநாளை முன்னிட்டு, அரியலூர் அண்ணா சிலை பின்புறம், சக்தி விநாயகர் கோவில் அருகே, ஏழை, எளிய மக்களுக்கு, அன்னதானம் வழங்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்ற, இந்த அன்னதான நிகழ்ச்சியில், அரியலூர் நகரை சேர்ந்த எழில் ராஜா, பழனிச்சாமி உட்பட, ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# சங்கரன்கோவிலில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி

சங்கரன்கோவில் : பிப். 2–

சங்கரன்கோவில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் (பொ) சுப்பையா தலைமை வகித்தார். திமுக நகர செயலாளர் பிரகாஷ், நகர அவை தலைவர் முப்பிடாதி முன்னிலை வகித்தனர். ஆசிரியை பொன் மேகலா வரவேற்றார். இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கி பேசியதாவது, தமிழக முதல்வர் கல்வி துறையில் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வி, பள்ளி மேலாண்மை குழு, மாணவ, மாணவியர்களின் தனித்திறமையை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், காலை உணவு திட்டம் உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை தமிழக முதல்வர் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் செயல்படுத்தி வருகின்றனர். மாணவிகள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வர முடியும் கல்வி மற்றும் தங்கள் தனித்திறமைகள், விளையாட்டு போன்றவற்றிலும் ஈடுபட்டு செயல்பட வேண்டும், தற்பொழுது சங்கரன்கோவில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மூன்று கோடி செலவில் புதிய மாவட்ட விளையாட்டு மைதானம் அமைக்கப்பட உள்ளது. அதில் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு நேரம் ஒதுக்கி அவர்கள் தங்கள் உடல் திறனை வலுப்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும். மாணவிகள் தமிழக முதல்வர் கல்வியில் செயல்படுத்தி வரும் திட்டங்களை பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டுமென பேசினார்.



தொடர்ந்து இந்த பள்ளியைச் சேர்ந்த மாவட்ட அளவில் கட்டுரை போட்டியில் 2ம் இடம் பிடித்த மாணவி மனிஷா மற்றும் மாநில அளவில் ஹார்மோனியம் வாசிக்கும் போட்டியில் 2ம் இடம் பிடித்த செல்வி சக்திமீனாட்சிதேவி ஆகிய மாணவிகளை பாராட்டி புத்தகங்கள் வழங்கினார். இதில் திமுக நகர துணை செயலாளர்கள் முத்துக்குமார், சுப்புத்தாய், வார்டு செயலாளர்கள் பாட்டத்தூர் ராமலிங்கம், பழனிச்சாமி, வீராசாமி, சதீஷ், பள்ளி மேலாண்மை குழு தலைவர் கலைச்செல்வி, உறுப்பினர் செல்வின் மற்றும் ஜான், காவல் கிளி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தத்தனூர் எம்.ஆர். கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம்

அரியலூர் : பிப். 2–

அரியலூர் மாவட்டம், எம். ஆர். கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.




அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்பில் கம்ப்யூட்டர் விஷன் பார் ஏஐ அண்ட் மெஷின் லேனிங் என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைப்பெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் தாளாளர் எம்.ஆர்.இரகுநாதன் தலைமை தாங்கினார். இயக்குநர் முனைவர் ஆர். இராஜமாணிக்கம் வாழ்த்துரை வழங்கினார். முதல்வர் முனைவர் ப.சங்கீதா முன்னிலை வகித்தார். கணினி துறைத்தலைவர் எஸ்.பாலமுருகன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி தாளாளர் பேசுகையில் புதிதாக வளர்கின்ற செயற்கை நுண்ணறிவு சாதனங்கள் மற்றும் இயந்திர கற்றலின் முக்கிய நோக்கத்தைப் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று பல கருத்துக்களை கூறினார்.

நிகழ்ச்சியில் கும்பகோணம் மாஸ் கல்லூரி கணினித்துறை பேராசிரியர் முனைவர் க.சரவணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் புதிதாக வளர்கின்ற தொழில்நுட்பங்களையும் மற்றும் செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு கணினி, கணினியால் கட்டுப்படுத்தப்படும் ரோபோ அல்லது நிரலை மனிதனைப் போலவே புத்திசாலித்தனமாக சிந்திக்கும் திறனை உருவாக்குவதற்கான ஒரு வழியாகும். இயந்திர கற்றலின் முக்கிய நோக்கம், இயந்திரங்கள் தரவுகளிலிருந்து வடிவங்கள் மற்றும் விதிகளைக் கற்றுக் கொள்வது, இதனால் அவை முடிவுகளை எடுக்கவும் புதிய தரவுகளில் செயல்படவும் முடியும். அதாவது அவை முடிவுகளை எடுப்பது, தரவை பகுப்பாய்வு செய்தல் மற்றும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதாகும் என்று பல கருத்துக்களை கூறினார். முடிவில் பேராசிரியர் க.அபிராமி நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கு தேவையான ஏற்பாடுகளை துறை பேராசிரியர்கள் மற்றும் பேராசிரியைகள் செய்திருந்தனர்.



மதுரை வட்டார தடய அறிவியல் துறை துணை இயக்குனர் ஏ.பெருமாள் பணி ஓய்வு பெற்றார். இந்நிகழ்ச்சியில் மதுரை தடய அறிவியல் துணை இயக்குனர் மற்றும் உதவி இயக்குனர்கள், முதுகுளத்தூர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் சின்னக்கண்ணு, வட்டார தடய அறிவியல் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தான் இயங்கிய தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணி ஆற்றும் போது காவல்துறைக்கு பல்வேறு வழக்குகளின் புலன் விசாரணைக்கு பெரிதும் உதவி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 34 ஆண்டுகள் தடய அறிவியல் துறையில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

# "பாஜக அரசின் அரசியல் பழிவாங்கல்" ஹேமந்த் சோரன் கைது குறித்து ஸ்டாலின் கண்டனம்

சென்னை : பிப். 2–

ஹேமந்த சோரன் கைது செய்யப்பட்டிருப்பது மத்திய பாஜக அரசின் அப்பட்டமான அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்றும், புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்தி பழங்குடியினத் தலைவரை துன்புறுத்துவது தரம் தாழ்ந்தது என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் ஹேமந்த் சோரன் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழக முதல்வர் ஸ்டாலின் இது தொடர்பாக தனது எக்ஸ் பதிவில், "ஹேமந்த சோரன் கைது செய்யப்பட்டிருப்பது மத்திய பாஜக அரசின் அப்பட்டமான அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை. புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்தி



பழங்குடியினத் தலைவரை துன்புறுத்துவது தரம் தாழ்ந்தது. இந்தச் செயல் விரக்தியையும், அதிகார துஷ்பிரயோகத்தையும் தூண்டுகிறது.

பாஜகவின் கேவலமான தந்திரமான செயல்கள் எதிர்க்கட்சிகளின் குரல்களை அடக்கிவிடாது. பாஜகவின் பழிவாங்கும் செயல்களுக்கு தலைவணங்காமல் உறுதியோடு நின்று இன்னல்களை எதிர்கொள்ளும் சோரனின் மன உறுதி பாராட்டுக்குரியது. அவரது உறுதிப்பாடு பாஜகளின் மிரட்டல் தந்திரங்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஓர் உத்வேகம்" எனத் தெரிவித்துள்ளார்.

# கடையநல்லூரில் சையது அப்துல்லா கலீஃபா தர்காவிற்கு சொந்தமான கடைகள் பத்தாண்டுகள் வாடகை வழங்காததால் சீல் வைப்பு

கடையநல்லூர் : பிப். 2–

தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் சையது அப்துல்லா கலீஃபா தர்காவிற்கு சொந்தமான கடைகளுக்கு 10 ஆண்டுகளுக்கு மேலாக வாடகை செலுத்தாத கடைகளுக்கு பொதுவுடமை அதிகாரி உத்தரவின் படி வக்பு வாரிய அதிகாரிகள் சீல் வைத்தனர்.



கடையநல்லூரில் வக்பு வாரியத்திற்கு சொந்தமான தெற்கு அய்யாபுரம் தெருவில் தங்கள் கட்சிக்கு பாத்தியப்பட்ட 2011– சையது அப்துல்லா கலிபா சாஹிப் தர்கா உள்ளது. இந்த தர்காவை தங்கள் கட்சி ஜமாத்தை சேர்ந்த நிர்வாகிகள் பராமரித்து வந்தனர். இதை நிர்வகிப்பதில் இரு பிரிவுகளாக செயல்பட்டதால் 2011ம் ஆண்டு இவர்களுக்கு மத்தியில் பிரச்சனை ஏற்பட்டு தனித்தனி பிரிவுகளாக செயல்பட்டனர்.

இந்த தர்காவிற்கு திருமங்கலம் - கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் 10க்கும் மேற்பட்ட வணிக நிறுவனங்கள் உள்ளன. வக்பு வாரியம் நியமித்த முத்தவல்லியான டாக்டர் மஜித் என்பவரிடம் வாடகை செலுத்தாததால் 2011ம் ஆண்டு முதல் இன்று வரை வக்பு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட முத்தவல்லி மஜீத்திடம் கடையின் வாடகையை வழங்க வலியுறுத்தி சென்னை வக்பு வாரிய பொது உடைமை அதிகாரி முன்னிலையில் விசாரணை செய்ததில் கடந்த 10 ஆண்டுகளாக வாடகையை வழங்காத கடைகளை சீல் வைத்து கையகப்படுத்த உத்தரவு பிறப்பித்தனர்.

அதனடிப்படையில் 1 மாதம் அவகாசம் வழங்கியும் வாடகை வழங்காமலும், கடையை காலி செய்யாமல் இருந்ததால் 10 கடைகளையும் நேற்று திருநெல்வேலி வக்பு வாரிய கண்காணிப்பாளர் அப்துல்வகாப், ஆய்வாளர்கள் செய்யதுரிஜா, ஷேக்அப்துல்லா, பர்கத்துல்லா, கடையநல்லூர் காவல் இன்ஸ்பெக்டர் ராஜா, விஏஓ ராமச்சந்திரன் தலைமையில் வக்பு அதிகாரிகள் அனைத்து கடைகளையும் பூட்டி சீல் வைத்து தங்கள் வசம் எடுத்துக் கொண்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.



மதுரை ஞானஒளிவுபுரம் சமூக நற்பணி மன்றத்தில் எஸ்.மணிகண்டன், கே.வர்ஷினி தேவி திருமண விழா தி.மு.க. அவைத்தலைவர் ஒச்சு பாலு தலைமையில் நடைபெற்றது. உடன் கே.எல்.பி. குரூப்ஸ் தலைவர் சுந்தரம், எம்.ஆர். மணிமாறன், சேட் சிவா, மணிராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# 'போதைப்பொருள் நடமாட்டத்தை தடுக்க தமிழகம் – புதுச்சேரி காவல் துறை கூட்டு நடவடிக்கை'

புதுச்சேரி : பிப். 2–

புதுச்சேரியில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களின் நடமாட்டத்தை முற்றிலும் தடுக்கும் வகையில் தமிழக போலீஸாருடன் புதுச்சேரி போலீஸார் இணைந்து செயல்பட உள்ளதாக அம்மாநில உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி காவல் துறையில் ஊர்க்காவல் படை வீரர்களுக்கான 500 காலி பணியிடங்களை நிரப்ப புதுச்சேரி அரசு சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்காக விண்ணப்பங்களை பெறப்பட்டது. அதன்படி 20,135 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இவர்களுக்கான உடற்தகுதி தேர்வு புதுச்சேரி கோரிமேடு ஆயுதப்படை மைதானத்தில் நேற்று தொடங்கியது. இதில் கலந்துகொண்ட உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் உடற்பயிற்சிதேர்வை தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் நமச்சிவாயம் கூறியது: "புதுச்சேரி அரசு பொறுப்பேற்ற பிறகு அரசு காலி பணியிடங்களை நிரப்புகிறோம். காவல் துறையில் முதல்கட்டமாக 390 காவலர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. 253 பேர் இரண்டாம் கட்டமாக தேர்வாகி பயிற்சியில் உள்ளனர். ஊர்க்காவல் படையில் 500 பேரை தேர்வு செய்ய உடல்தகுதி தேர்வு தொடங்கியுள்ளது. 23 நாட்களுக்கு நடக்கவுள்ளது. நேர்மையான முறையில் தேர்வு நடத்தப்படும். வெகு விரைவில் மீதமுள்ள டெக் ஹேண்டலர், 200 ஹோஸ்டல் ஹோம்கார்டு உதவி ஆய்வாளர் 61 பணியிடம் நிரப்படும். காவலர்களுக்கான பதவி உயர்வு மற்றும் கருணை அடிப்படையில் வேலை போன்ற காவலர்களின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

புதுச்சேரியில் சட்டம் - ஒழுங்கு கட்டுக்குள் உள்ளது, புதுச்சேரி மாநிலத்தில் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களின் நடமாட்டத்தை தடுக்க தமிழக போலீஸாருடன் குழுவாக இணைந்து புதுச்சேரி போலீஸார் செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போதைபொருள் நடமாட்டம் தடுக்கப்படும். புதுச்சேரியில் மாநிலத்தில் உள்ள அனைத்து கண்காணிப்பு கேமராக்களை சரி செய்யப்படஉள்ளது. அதேபோன்று காவல் நிலையங்களை கண்காணிக்கும் வகையில் அனைத்து காவல் நிலையங்களிலும் மூன்று கோடி ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட உள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரவுள்ளோம்" என்று தெரிவித்தார்.

# அரியலூரில் அதிமுக சார்பில் கண்டன ஆர்பாட்டம்

அரியலூர் : பிப். 2,

அரியலூரில் ஆதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உளுந்தூர்பேட்டை அருகே, திருநருங்குன்றம் கிராமத்தை சேர்ந்த, பட்டியல் இன பெண்ணை, வன்கொடுமை செய்த, பல்லாவரம் சட்டமன்ற தொகுதி திமுக எம்எல்ஏ கருணாநிதி மகன் மற்றும் அவரது குடும்பத்தை சேர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத, தமிழக அரசை கண்டித்து, மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட தலைநகரங்களில், அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்தார்.



அதன்படி அரியலூர் தாலுகா அலுவலகம் எதிரே, அதிமுக சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொரடாவுமான தாமரை எஸ்.ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் அன்பழகன் வரவேற்று பேசினார். அதிமுக மாவட்ட அவை தலைவரும், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி முன்னாள் எம்எல்ஏ–வுமான ராமஜெயலிங்கம், முன்னாள் மாவட்ட செயலாளர் இளவரசன் உள்ளிட்டோர் பேசினார்கள். அரியலூர் மாவட்ட செயலாளர் தாமரை எஸ்.ராஜேந்திரன் சிறப்புரை ஆற்றினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில், அதிமுக ஊராட்சி மன்ற தலைவர்கள் பிரேம்குமார், செங்கமலை, பரமசிவம், எம்ஜிஆர் மன்ற மாநில நிர்வாகி அறிவு என்கிற சிவசுப்பிரமணியன், வக்கீல் சங்க நிர்வாகிகள் வெங்கடாஜலபதி, ராமகோவிந்தராஜன், முன்னாள் நகராட்சி கவுன்சிலர் சிவஞானம், ஆண்டிமடம் சேர்மன் மருதமுத்து, ஒன்றிய செயலாளர்கள் பொய்யூர் பாலசுப்ரமணியன், அரியலூர் செல்வராஜ், ஜெயங்கொண்டம் கல்யாணசுந்தரம், ஆண்டிமடம் ராமச்சந்திரன், தா.பழூர் வக்கீல் அசோகன், திருமானூர் வடிவழகன், ஆண்டிமடம் ரீடு செல்வம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வாரணாசி நீதிமன்றம் அனுமதியை தொடர்ந்து கியான்வாபி மசூதி வளாகத்தில் இந்துக்கள் வழிபாடு

வாரணாசி : பிப். 2–

கியான்வாபி மசூதி வளாகத்தில் உள்ள தெய்வங்களை வழிபட வாரணாசி நீதிமன்றம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, பல தசாப்தங்களுக்கு பின்னர் இந்துக்கள் முதல் முறையாக மசூதியின் தெற்கு பாதாள அறையில் நேற்று அதிகாலையில் வழிபாடு நடத்தினர்.

வழிபாடு நடப்பதற்கு முன்பாக காவல் ஆணையர் அசோக் முதா ஜெயின் மற்றும் கோட்ட ஆணையர் கவுசால் ராஜ் சர்மா ஆகியோருடன் நீண்ட ஆலோசனை நடத்திய மாவட்ட ஆட்சியர் ராஜலிங்கம், மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவு நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். முன்னதாக, இது குறித்த வழக்கில் நேற்று முன்தினம் புதன்கிழமை தீர்ப்பளித்த மாவட்ட நீதிபதி அஜய் கிருஷ்ண விஸ்வேஷா, கடந்த 1993–ம் ஆண்டுக்கு முன்பு அங்கு வழிபாடு செய்து வந்த சோம்நாத் வியாஸ் குடும்பத்தினர் கியான்வாபி மசூதியின் தெற்கு பாதாள அறையில் மீண்டும் பூஜை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட்டார்.

முன்னதாக, வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்தை ஒட்டி உள்ள கியான்வாபி மசூதி, கோயிலை இடித்து கட்டப்பட்டது என நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த மசூதிக்குள் உள்ள கோயிலின் அர்ச்சகருடைய வாரிசுதாரர்



சைலேந்திர குமார் பதக் என்பவர் வாரணாசி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அவர், 'கியான்வாபி மசூதியில் கீழ்தளத்தில் உள்ள 7 அறைகளில் ஓர் அறையில் உள்ள தெய்வங்களுக்கு தனது தாத்தா சோம்நாத் வியாஸ் பூஜை செய்து வந்தார். 1993–ம் ஆண்டு முதல் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே, அங்கு மீண்டும் பூஜைகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட வேண்டும்' என்று தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த மாவட்ட நீதிபதி அஜய் கிருஷ்ண விஸ்வேஷா நேற்று முன்தினம் புதன்கிழமை தீர்ப்பளித்தார். தீர்ப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சைலேந்திர குமார் பதக் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் விஷ்ணு சங்கர் ஜெயின், 'கியான்வாபி மசூதியின் கீழ்த்தளத்தில் உள்ள வியாஸ் கா தேகனா என்ற இடத்தில் இந்துக்கள் வழிபாடுகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் 7 நாட்களுக்குள் மேற்கொள்ள நீதிமன்றம் உத்ரதவிட்டுள்ளது. எனவே, இன்னும் 7 நாட்களில் இந்துக்கள் அங்கு சென்று வழிபட முடியும். அங்குள்ள தெய்வங்களுக்கு பூஜை செய்ய ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது' என தெரிவித்தார்.

அதேநேரத்தில், வாரணாசி நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை எதிர்த்து அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர இருப்பதாக கியான்வாபி மசூதி தரப்பு தெரிவித்துள்ளது.

# காசிமேடு சி.ஜி காலனி மீனவ கிராமத்தில் நவீன மீன் விற்பனை அங்காடி அடிக்கல் நாட்டு விழா

ஆர் கே.நகர் எம்எல்ஏ பூமி பூஜை போட்டு பணிகளை துவக்கி வைத்தார்



சென்னை,பிப்,2

சென்னை காசிமேடு சி ஜி காலனி பகுதியில் 1964 ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞரால் திறக்கப்பட்ட மீன் விற்பனை அங்காடியில் 35க்கும் மேற்பட்ட கடைகள் மீன் விற்பனை செய்யப்பட்டு வந்தன இதனை அடுத்து 60 ஆண்டு காலம் ஆன நிலையில் சிதிலமடைந்து கட்டிடம் காணப்பட்டு இருப்பதால் நவீன வசதிகள் மீன் அங்காடி கட்டி தரும்படி மீனவ மக்கள் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்தனர்.

மீனவ மக்களின் கோரிக்கையை ஏற்று ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 90 லட்சம் செலவில் மீன் பதப்படுத்தும் அறை மற்றும் காய்கறி விற்பனை மீன் விற்பனை அங்காடி என 58 கடைகள் கொண்ட வசதிகளுடன் நவீன மீன் அங்காடி கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

காசிமேடு ஜீவரத்தினம் சாலை அருகே நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன், மாநகராட்சி நிலை குழு உறுப்பினர் தா. இளைய அருணா உள்ளிட்டோர் பங்கேற்று பூஜைகள் போட்டு பணிகளை தொடங்கி வைத்தனர்.

இதில் கலந்துகொண்ட அப்பகுதி மீனவ மக்கள் மீன் விற்பனை அங்காடியில் நன்றாக விற்பனை பெருக வேண்டும் என வேண்டுதல் வைத்து பூஜை செய்து பணிகளை தொடக்கி வைத்தனர் நிகழ்ச்சியில் 43 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பவித்ரா, பகுதி செயலாளர் லட்சுமணன், மருது கணேஷ், பகுதி அவைத்தலைவர் அணிபா, ரமேஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

# தேர்தல் பிரிவு தனித்துணை வட்டாட்சியர் பொறுப்பேற்பு



தரங்கம்பாடி, பிப்.2–

தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பிரிவு தனித்துணை வட்டாட்சியராக பாபு வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் தேர்தல் பிரிவு தனித்துணை வட்டாட்சியராக பாபு பொறுப்பேற்றுக் கொண்டார். தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பழனியப்பார் அலுவலக ஊழியர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.





அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிச்சாமி உத்தரவின் பேரில் சென்னை புறநகர் மாவட்ட சார்பில், மடிப்பாக்கம் சுட்றோடு, வரதம்பாள் கல்யாண மண்டபம் அருகில், சென்னை, திருவான்மியூரில் பட்டியலினத்தைச் சேர்ந்த 18 வயது மாணவி மீது வன்கொடுமை, ஆபாச மிரட்டல் மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததை கண்டித்தும் பாதிக்கப்பட்ட மாணவிக்கு உரிய பாதுகாப்பும், இழப்பீடு வழங்க கோரியும் வன் கொடுமை நிகழ்த்தியவர்கள் மீது இதுவரை உரிய நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், நடைபெற்றது. புறநகர் மாவட்ட செயலாளர் கே.பி.கந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், குன்றத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.பி.ஏசுபாதம், கழக மாணவரணி மாநில துணைச் செயலாளரும் கோவிலம்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவருமான பொறியாளர் லயன் சி.மணிமாறன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் கே.பி.க.சதீஷ்குமார் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, நகர கழக செயலாளர்கள், பிற அணிகளின் மாவட்ட கழக செயலாளர்கள், வட்ட கழக, கிளை கழக, நகர வார்டு கழக செயலாளர்கள், ஒன்றிய, பகுதி நகர கழக மற்றும் பிற அணிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், மகளிர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# கோவில் உண்டியல் பணம் எண்ணும் பணியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஈடுபட்டனர்





சீர்காழி. பிப்,2-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த திருவெண்காடு கிராமத்தில் தேவார பாடல் பெற்ற சுவேதாரண்யேஸ்வர ஸ்வாமி கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் நவகிரகங்களில் புதன் பகவானும் சிவபெருமானின் அம்சமான அகோர மூர்த்தியும் நடராஜபெருமானும் தனித்தனி சன்னதிகளில் அருள் பாலிக்கின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தில் உள்ள இக்கோவிலுக்கு நாள்தோறும் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த பக்தர்கள் வந்து தரிசனம் செய்து செல்வது வழக்கம். இத்தகைய சிறப்பு வாய்ந்த கோவிலில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உண்டியல்கள் திறந்து பக்தர்கள் செலுத்திய காணிக்கைகள் எண்ணி கோவில் கணக்கில் சேர்க்கப்படும்.

அதன்படி இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் முத்துராமன், ஆய்வாளர் ரவி, பத்ரி நாராயணன், கோவில் செயல் அலுவலர் முருகன் மற்றும் கோவில் பணியாளர்கள் முன்னிலையில் உண்டியல்கள் திறக்கப்பட்டு வங்கி அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் காணிக்கைகளை எண்ணும் பணியில் ஈடுபட்டனர். முடிவில் பக்தர்கள் செலுத்தியது 10 லட்சத்து 94 ஆயிரத்து 266 ரூபாய். மேலும் 15 கிராம் தங்கம், 98 கிராம் வெள்ளி, 76 மலேசியா ரிங்கட், 10 சிங்கப்பூர் டாலர், 20 யூரோ 206 அமெரிக்க டாலர் ஆகியவையும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது. காணிக்கையாக கிடைத்த பணத்தினை வங்கி கணக்கில் அதிகாரிகள் முன்னிலையில் வரவு வைக்கப்பட்டது.

# தண்டலம் கிராமத்தில் அரசு ஊழியர் வீட்டின் பூட்டை உடைத்து தங்க-வெள்ளிப் பொருட்களை கொள்ளை

## மர்ம நபர்களுக்கு போலீசார் வலை வீச்சு



ஊத்துக்கோட்டை,பிப்2-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம் தண்டலம் ஊராட்சியை சேர்ந்த ஸ்ரீவாரி நகரில் வசித்து வருபவர் அஸ்வினி(வயது29) ஆவார். இவர் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்தின் பணிதல பொறுப்பாளராக பணியாற்றி வருகிறார். இவரது கணவர் கணபதி சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் பிளம்பராக பணியாற்றி வருகிறார்.

இத்தம்பதியினருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். நேற்று காலை குழந்தைகள் பள்ளிக்கு சென்று விட்டனர். கணவரும் வேலைக்கு சென்று விட்டார். எனவே, அஸ்வினி வீட்டை பூட்டிக் கொண்டு பணிதல பொறுப்பாளர் பணிக்கு சென்று இருந்தார்.

மாலை வீடு திரும்பிய போது இவரது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது பீரோவை உடைத்து அதில் இருந்த கம்மல், மோதிரம் உள்ளிட்ட சுமார் மூன்று சவரன் தங்க நகைகளையும், கொலுசு, வெள்ளி டம்ளர், காமாட்சி அம்மன் விளக்கு உள்ளிட்ட சுமார் அரை கிலோ வெள்ளி பொருட்கள் உள்ளிட்டவை கொள்ளை போனதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

பட்டப்பகலில் நடைபெற்ற இந்த கொள்ளை சம்பவம் குறித்து பெரியபாளையம் காவல் நிலைய போலீசாருக்கு தகவல் அளித்தார். சம்பவ இடத்துக்கு பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் தலைமையில் போலீசார் விரைந்து வந்தனர். கொள்ளை சம்பவம் குறித்து விசாரணை செய்தனர். பட்டப் பகலில் நடைபெற்ற இந்த கொள்ளை சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி, காட்பாடி உழவர் சந்தையில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் சோமு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வெங்கடேசன், துணை இயக்குநர் (வேளாண் வணிகம் மற்றும் விற்பனை) கலைச்செல்வி ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னை, பாலகிருஷ்ணா நகர் பிரதான சாலை, பொன்னியம்மன்மேடு பகுதியில் எழுந்தருளி அருள் பாலித்து வரும், அருள்மிகு ஸ்ரீ சொர்ண விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா சோபகிருது வருடம், தை மாதம் 18ஆம் தேதி, 01.02.2024 வியாழக்கிழமை சஷ்டி திதி, சித்திரை நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 9.00 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் வெகு விமர்சையாக நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து, மகா தீபாரதனையும் அருட்பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 12.30 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## சீர்காழியில் உங்களைத் தேடி உங்கள் ஊரில்

# என்ற புதிய திட்டம் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி பல்வேறு அரசு அலுவலகங்களில் ஆய்வு



சீர்காழி,பிப்,2

உங்களைத் தேடி உங்கள் ஊரில் என்ற திட்டத்தினை தமிழக முதல்வர் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அதன்படி நேற்று மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி பகுதியில் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் வருகை புரிந்தனர்.

வைத்தீஸ்வரன் கோயில் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். இடுபொருட்கள் விதைகள் தங்கு தடை என்று கிடக்கிறதா என்பதை ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து வைத்தீஸ்வரன் கோயில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உள்ள மாணவ மாணவிகள் கற்றல் திறனை மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொது மக்களை சந்தித்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றார்.

சீர்காழி பனங்காட்டங்குடி பகுதியில் வசிக்கும் ஒன்பது குடும்பத்தினர் தங்களுக்கு சாதி சான்றிதழ் இல்லாமல் பிள்ளைகளின் மேற்படிப்பை தொடர முடியவில்லை என ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர். அதனை ஆய்வு செய்து 9 குடும்பங்களுக்கு சாதி சான்றிதழ் வழங்கிட வட்டாட்சியரிடம் அறிவுறுத்தினார்.

மேலும் பட்டா மாற்றம் குடும்ப அட்டை போன்றவற்றிற்கு பொதுமக்கள் அளித்த மனுக்களை பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து நேற்று ஒரு நாள் சீர்காழி பகுதியில் மாவட்ட ஆட்சியர் தங்கி சட்டநாதபுரம், சீர்காழி, தென்பாதி, செம்மங்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு நேரில் சென்று நியாய விலை கடை, ஆரம்ப சுகாதார நிலையம், இ சேவை மையம், கூட்டுறவு நகர வங்கி, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆதிதிராவிடர் நல விடுதி, முதியோர் இல்லம், பிற்படுத்தப்பட்டோர் நலவிடுதி உள்ளிட்டவைகளை ஆய்வு மேற்கொண்டார்.

குறிப்பாக இந்த பகுதிகளில் அனைத்து துறை அலுவலர்களும் முகாமிட்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நேரில் பெற்று அரசு விதி முறைகளுக்கு உட்பட்டு தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் தீர்வு காணப்படும் என்பதே ஆகும் எனவே சீர்காழி பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்களை தேடி வரும் அலுவலர்களை சந்தித்து தங்களுக்கு உண்டான குறைகளை தெரிவித்து உடனடி தீர்வை தேடி கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்த பட்டுள்ளது.

# பட்டினச்சேரி மீனவர்கள் போராட்டத்திற்கு இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம் ஆதரவு



காரைக்கால், பிப்,2-

காரைக்கால் மாவட்டம் பட்டினச்சேரி மீனவர் கிராமத்தில் திருமலை ராஜன் ஆறு முகத்துவாரம் வழியாக படகுகள் வரவும் போகவும், அதனால் அந்த ஆற்றங்கரையில் அந்த கிராமத்தில் இருக்கும் 200 கும் மேற்பட்ட விலை உயர்த்த படகுகளை பாதுகாப்பாக நிறுத்த ஏதுவாக தூர்வாரி, இருபுறமும் பாறைகளை கொண்டு அரண் அமைப்பது, சிறு வகை மீன்பிடி துறைமுகம் அமைத்து தருவது, தொண்டு நிறுவனம் ஒன்று பல வருடங்களுக்கு முன்பு கட்டி தந்த ஐஸ் கட்டி உற்பத்தி தொழிற்சாலையை கிராம மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பது, கிராம மக்களின் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்க மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்து கொடுப்பது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அந்த கிராம மீனவ சமூகத்தினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதை தொடர்ந்து கடந்த 30.01.2024 அன்று நடந்த உண்ணாநிலை போராட்டத்திற்கு இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் ஆதரவை கோரினர். கோரிக்கையை ஏற்று காரைக்கால் பட்டினச்சேரி மீனவர் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு இந்திய ஒன்றிய அரசு மற்றும் யூனியன் பிரதேச அரசு தீர்வு காண வலியுறுத்தி இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் மாநில தலைவர் டாக்டர்.எஸ். ஆனந்த்குமார் ஆதரவளித்து, சிறப்புரையாற்றினார் கண்டன முழக்கங்கள் இட்டு உண்ணாநிலை போராட்டத்தை நிறைவு செய்ய குளிர் பானங்களை வழங்கி அன்று சுமார் மாலை 5:30 மணி அளவில் நிகழ்ச்சியை முடித்துவைத்தார்.

அவர் பேசும் போது போராட்டங்கள் தீவிரமடைய உத்வேகங்கள் வகுக்கப்படும் என்றும் தெரிவித்தார். மீனவர்களின் அந்த கோரிக்கைகளை அந்த ஒரே ஒரு சமூகத்தின் பிரச்சனையாக பார்ப்பதற்கு பதிலாக, மீன் உண்ணும் அனைவரும் மீனவர்களிடம் வைத்திருக்கும் நன்றி மற்றும் விசுவாச உணர்வுகளை புரிந்து, அத்தகைய பொதுமக்களிடம் கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் அலட்சிய ஆட்சியாளர்களின் அகந்தையை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மீனவர்களின் பாதிப்பு, மீன் பிரியர்களின் பாதிப்பு என்று அடிப்படையில் போராட்ட வியூகத்தை அமைக்கவேண்டும். விவசாயிகள், தொழிற்சங்கங்களின் ஆதரவை திரட்ட வேண்டும். மேலும், கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டத்தை இடமாற்றம் செய்ய கோரும் புதுத்துறை, தர்மபுரம் மக்களையும் ஒருங்கிணைத்து வலுவான போராட்டம் நடத்தி வாக்காளர்களிடம் ஆட்சி மாற்றம் கொண்டுவர பரப்புரை செய்ய வேண்டும். அடிப்படை வாழ்வாதாரத்திற்கு உழைக்கும் மக்களுக்கு போராடுவது ஒரு வேலை அல்ல என்பதையும் அந்த நிலைக்கு மக்களை தள்ளியவர்களை ஆட்சி அதிகாரத்தில் இருந்து வெளியே தள்ள வாக்காளர்களிடம் மாற்றத்திற்கு ஓட்டு போட வலியுறுத்த வேண்டும். ஏனென்றால், வாக்காளர்களுக்கும் அது போல ஆட்சியர்களிடம் இருந்து எதிர்வரும் காலங்களில் பாதுகாப்பு. ஓட்டுகளை சேகரிக்கும் தேர்தல் ஆணையம் யாருக்கும் வாக்களிக்க வேண்டாம் என்ற நமக்கு தரும் நோட்டா வாய்ப்புக்கு பதிலாக மக்களை புறக்கணிக்கும் ஆட்சியர்களை புறக்கணிக்க வாக்காளர்களிடம் கோருவது ஆரோக்கியமான ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி உருவாகும் என்றார் டாக்டர் எஸ். ஆனந்த்குமார். பட்டினச்சேரி கிராம பஞ்சாயத்தர்கள் கலைமணி, வளர் செல்வம், மச்சேந்திரன், நடேசன், வடிவேல், முருகேசன், வீரபாலன், ஜெயமூர்த்தி, முருகவேல், வெற்றிவேல், பாக்கியராஜ், மேலும் ஆண்கள் மற்றும் பெண்கள் சுமார் 600கும் மேற்பட்டோர் பெரும் திரளாக கலந்துகொண்டனர்.

# சீர்காழியில் ரேசன் கடையில் குப்பை நிறைந்த பொருட்கள் வழங்குவதாக பொதுமக்கள் புகார் மாவட்ட ஆட்சியர் அதிரடி





சீர்காழி,பிப்,2

உங்களைத் தேடி உங்கள் ஊரில் என்ற திட்டத்தினை தமிழக முதல்வர் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அதன்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி பகுதியில் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் வருகை புரிந்தனர்.

வைத்தீஸ்வரன்கோயில் துணை வேளாண்மை உருவாக்கி மையத்தில் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார் இடுபொருட்கள் விதைகள் தங்கு தடை என்று கிடக்கிறதா என்பதை ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து வைத்தீஸ்வரன்கோயில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உள்ள மாணவ மாணவிகள் கற்றல் திறனை மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.


தொடர்ந்து சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வுமேற்கொண்டார் அப்போது பொது மக்களை சந்தித்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றார் அவ்வாறு சீர்காழி பனங்காட்டங்குடி பகுதியில் வசிக்கும் ஒன்பது குடும்பத்தினர் தங்களுக்கு சாதி சான்றிதழ் இல்லாமல் பிள்ளைகளின் மேற்படிப்பை தொடர முடியவில்லை என ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர் அதனை ஆய்வு செய்து 9 குடும்பங்களுக்கு சாதி சான்றிதழ் வழங்கிட வட்டாட்சியரிடம் அறிவுறுத்தினார் மேலும் பட்டா மாற்றம் குடும்ப அட்டை போன்றவற்றிற்கு பொதுமக்கள் அளித்த மனுக்களை பரிசளித்து உடனடியாக நடவடிக்கை அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து ஒரு நாள் சீர்காழி பகுதியில் மாவட்ட ஆட்சியர் தங்கி சட்டநாதபுரம், சீர்காழி, தென்பாதி, செம்மங்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு நேரில் சென்று நியாய விலை கடை, ஆரம்ப சுகாதார நிலையம், இ சேவை மையம், கூட்டுறவு நகர வங்கி, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆதிதிராவிடர் நல விடுதி, முதியோர் இல்லம், பிற்படுத்தப்பட்டோர் நலவிடுதி உள்ளிட்டவைகளை ஆய்வு மேற்கொள்ள உள்ளார். குறிப்பாக இந்த பகுதிகளில் அனைத்து துறை அலுவலர்களும் முகாமிட்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நேரில் பெற்று அரசு விதி முறைகளுக்கு உட்பட்டு தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் தீர்வு காணப்படும் என்பதே ஆகும் எனவே சீர்காழி பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்களை தேடி வரும் அலுவலர்களை சந்தித்துதங்களுக்கு உண்டான குறைகளை தெரிவித்து உடனடி தீர்வை தேடி கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்த பட்டுள்ளது.



ராணிப்பேட்டை மாவட்டம் முத்துக்கடை பேருந்து நிலையம் அருகே அதிமுக ராணிப்பேட்டை மேற்கு மாவட்டம் சார்பில் பல்லாவரம் திமுக சட்டமன்ற உறுப்பினரின் மகன் மற்றும் மருமகள் மீது உரிய நடவடிக்கை எடுக்காத தமிழக அரசை கண்டித்தும் , பட்டியலின பெண்ணுக்கு நீதி வழங்க வேண்டும் எனக்கோரியும் ராணிப்பேட்டை அதிமுக மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.சுகுமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சியை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டு ஆளுங்கட்சிக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

# நான்கு வழிச்சாலை அமைக்கும் பணிக்கு நிலம் கையகப்படுத்தப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்டோர் மனு அளித்தனர்



தரங்கம்பாடி, பிப்.2–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டாச்சியர் அலுவலகத்தில் 4 வழிச்சாலை அமைக்கும் பணியால் நிலம் , வீடுகளை இழந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் கே.பி.மார்க்ஸ் தலைமையில் வியாழக்கிழமை மனு அளித்தனர். விழுப்புரம் முதல் நாகப்பட்டினம் வரையில் 4 வழிச்சாலை அமைக்கும் பணி கடந்த சில வருடங்களாக நாகம் என்ற தனியார் நிறுவனம் சாலை அமைக்கும் பல ஆண்டுகளாக நடைப்பெற்றுவருகிறது.

இந்நிலையில் தரங்கம்பாடி அருகே அப்பராசப்புத்தூர்,தலைச்சங்காடு பகுதிகளில் 150 ஆண்டுகளுக்கும் மேலாக பல தலைமுறைகளாக தனியார் பண்ணையின் பெயரிலுள்ள இடத்தில் வீடுகளை கட்டி வசித்துவருகிறவர்களுக்கு 1971 மற்றும் 1972 களில் அரசு சார்பில் பட்டா வழங்கியுள்ளது. அந்த பகுதி வழியாக நான்கு வழிச்சாலை அமைவதால் அந்த இடங்களில் வசிக்கும் மக்களுக்கு இழப்பீட்டை தராமல் நகாய் அதிகாரிகள் தனியார் பன்னைக்கு இழப்பீடு தந்துவிட்டதாக கூறி 11 குடியிருப்புகளை இடித்து வருகிறது.

வீடுகளை இழந்து வசிக்க இடமில்லாமல் தவிக்கும் 11 குடும்பங்களை சேர்ந்தவர்களும் மார்க்சிஸ்ட் கட்சியின் செம்பனார்கோவில் ஒன்றிய செயலாளர் கே.பி.மார்க்ஸ் தலைமையில் தரங்கம்பாடி வட்டாச்சியர் அலுவலகத்தில் தேசிய நெடுஞ்சாலை நிலஎடுப்பு தனிவட்டாச்சியர் ராகவனிடம் உரிய இழப்பீடும்,குடியிருக்க மாற்று இடமும் கேட்டு மனு அளித்தனர்.

மனு அளித்து கோரிக்கைகளை முறையிட்ட பின் செய்தியாளர்களை சந்தித்த கே.பி.மார்க்ஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு பதிலாக காண்டிராக்ட் நிறுவனத்திற்கு பணி செய்வதுப்போல செயல்படுகின்றனர். தலைச்சங்காடு,அப்பராசப்புத்தூரில் தனியார் பண்ணையில் தலைமுறை தலைமுறையாக வேலை செய்ததற்காக வழங்கப்பட்ட அடிமனையில் கூரை வீடுகள் கட்டி வாழ்ந்து வருகிற அப்பாவிமக்களை அகற்றிவிட்டு இடத்தை அபகரிக்கும் நகாய் அதிகாரிகள் உரிய இழப்பீட்டை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்காமல் தனியார் பண்ணைக்கு வழங்குகிற போக்கு எந்தவிதத்தில் நியாயம் என தெரியவில்லை,

வீடுகளைஇழந்துநிர்கதியாய் நிற்கும் 11 குடும்பங்களுக்கும் உரிய இழப்பீடும்,மாற்று இடமும்வழங்கவில்லையெனில் மார்க்சிஸ்ட் கட்சி போராட்டங்களை நடத்தும் என்றார்.

# கல்லாக்கோட்டை கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்ட பொது மக்கள் எதிர்ப்பு

தேர்தலை புறக்கணிக்கப் போவதாக ஆர்ப்பாட்டம்



கந்தர்வகோட்டை : பிப். 2–

கந்தர்வகோட்டை ஒன்றியம், கல்லாக்கோட்டை கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் புதிதாக கட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் வளாகத்தில் மாவட்ட கோட்டாட்சியர் முருகேசன், வட்டாட்சியர் வி.ராமசாமி முன்னிலையில் சமீபத்தில் பூமி பூஜை போடப்பட்டு பணி தொடங்கப்பட்டது.

அப்போது அந்த பகுதியைச் சேர்ந்த கிராம பொதுமக்கள் இந்த இடம் கோவிலுக்கு சொந்தமானது என்றும் கோவிலுக்கு போதுமான இடம் இல்லாததால் இந்த இடத்தில் அலுவலகம் கட்ட வேண்டாம் எனக் கூறி மாற்று இடத்தில் கட்டிக்கொள்ளுங்கள் என எதிர்ப்பு தெரிவித்தனர். தொடர்ந்து அந்த இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க வாகனம் கொண்டுவந்து பணி தொடங்கியபோது, கல்லாகோட்டை கிராமத்தைச் சேர்ந்த ரெங்கசாமி தலைமையில் ஊர் மக்கள் திரண்டு வந்து வரும் பாராளுமன்ற தேர்தலை புறக்கணிக்கப் போவதாக கூறி கண்டன கோஷம் எழுப்பி எதிர்ப்பு தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த வட்டாட்சியர் வி.ராமசாமி பொதுமக்களிடம் இந்த இடம் அரசு பெயரில் உள்ளது எனவும், பணியை தடுக்க வேண்டாம் என கூறினார். மேலும் உங்கள் கோரிக்கை குறித்து மாவட்ட நிர்வாகத்திடம் முறையிடுங்கள் தற்சமயம் நீங்கள் அனைவரும் கலைந்து செல்ல வேண்டும் என தெரிவித்தார். அந்த இடத்தில் கந்தர்வகோட்டை காவல் ஆய்வாளர் முருகேசன் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். வருவாய் அலுவலர் பிரியதர்ஷினி கிராம நிர்வாக அலுவலர் கணேசன் மற்றும் ஊர் பொதுமக்கள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# "நாவடக்கத்துடன் பேச ஆ.ராசா கற்றுக்கொள்ள வேண்டும்" – ஓபிஎஸ்



சென்னை : பிப். 2–

"எம்ஜிஆரை ஆ.ராசா இழிவுப்படுத்தி பேசியுள்ளது கடும் கண்டனத்திற்குரியது. இனி வருங்காலங்களில் நாவடக்கத்துடன் பேச ஆ.ராசா கற்றுக்கொள்ள வேண்டும்" என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தன்னுடைய திரைப்படங்கள் வாயிலாக திமுக ஆட்சி தமிழகத்தில் காலூன்றுவதற்கு முழுக் காரணமாக விளங்கியவர் எம்ஜிஆர். "முகத்தை காட்டினால் முப்பது லட்சம் வாக்குகள் கிடைக்கும்" என்று அண்ணாவால் போற்றப்பட்டவர் எம்ஜிஆர். கட்சிக் கணக்கு கேட்டதற்காக கட்சியை விட்டு நீக்கி "பால் குடித்த வீட்டிற்கு பாதகம்" செய்த தீய சக்திகளை அகற்றி, அஇஅதிமுக ஆட்சியை தமிழகத்துல் அமைத்து, மக்களுக்கு பொற்கால ஆட்சியை வழங்கியவர் எம்ஜிஆர்.

எம்ஜிஆர் கட்சியை விட்டு வெளியேற்றியதன் விளைவு, அவர் உயிரோடு இருக்கும் வரை தி.மு.க.வால் ஆட்சிப் பொறுப்பிற்கு வர முடியவில்லை. இதற்குக் காரணம் மக்கள் அவர்மீது வைத்திருந்த அளவற்ற அன்புதான். "தங்கத்தை மண்ணில் இருந்து தோண்டி எடுப்பார்கள். இப்போது மண்ணைதோண்டிதங்கத்தைப் புதைக்கிறார்கள்" என்று எம்ஜிஆர் மறைவின் போது வருணனை செய்யப்பட்டது. அந்த அளவுக்கு, மக்களை ஈர்க்கும் காந்த சக்தியை படைத்ததால்தான், மண்ணைவிட்டு மறைந்து பல ஆண்டுகள் கடந்தும், மக்களின் நெஞ்சங்களில் இன்றளவும் நீங்கா இடம்பிடித்து இருக்கிறார் எம்ஜிஆர்.

தன்னலத்தை ஒதுக்கி மக்கள் நலனுக்காக எம்ஜிஆர் பாடுபட்டதால்தான் மத்திய அரசு அவருக்கு இந்திய அரசின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருதினை அளித்து கவுரவித்தது. மக்களின் மனங்களில் இன்றளவிலும் குடிகொண்டு இருப்பவரும், கரை படியாத கரத்துக்கு சொந்தக்காரரும், மக்கள் நலத்திற்காக மகத்தான திட்டங்களைத் தீட்டியவருமான எம்ஜிஆரை குடும்பக் கட்சியான தி.மு.க.வைச் சேர்ந்த ஆ.ராசா இழிவுப்படுத்தி பேசியுள்ளது கடும் கண்டனத்திற்குரியது. இவ்வாறு பேசியுள்ளது தி.மு.க.வுக்கும், ஆ.ராசாவுக்கும் தான் இழுக்கே தவிர எம்ஜிஆருக்கு அல்ல.

இருப்பினும், இனி வருங்காலங்களில் நாவடக்கத்துடன் பேச ஆ.ராசா கற்றுக் கொள்ள வேண்டும். நாவடக்கம் இல்லாமல் பேசும் ஆ.ராசாவுக்கு, 'நாவை அடக்காவிட்டால் சொற்குற்றம் ஏற்பட்டு துன்பப்பட நேரிடும்' என்ற வள்ளுவரின் வாக்கினை சுட்டிக் காட்டுவதோடு, வருகின்ற தேர்தலில் இதற்கான விளைவுகளை தி.மு.க.வும், ஆ.ராசாவும் சந்திக்க நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

# கந்தர்வகோட்டையில் ஆளும் திமுக அரசை கண்டித்து அதிமுக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



கந்தர்வகோட்டை : பிப். 2–

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் ஆளும் திமுக அரசை கண்டித்து அதிமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தலைமை தாங்கினார். கழகத்தின் பொதுச்செயலாளர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது பேசிய சி.விஜயபாஸ்கர் தமிழகத்தில் நடைபெறுகின்ற அராஜக போக்கை தட்டிக் கேட்க அண்ணா திமுக கட்சியை தவிர தமிழகத்தில் வேறு கட்சிகள் இல்லை. திமுக ஆட்சியில் கொலை கொள்ளை போதைப்பொருள் விற்பனை என தமிழக முழுதும் தினம் தோறும் பல்வேறு காட்சிகள் அரங்கேறி வருகிறது. அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை, மருத்துவமனைகள் சரிவர இயங்கவில்லை, போக்குவரத்து கழகங்கள் செயல்படவில்லை, பள்ளிகள், கல்லூரிகள் செயல்படவில்லை, மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத இந்த அரசை கண்டிக்கிறோம். அப்பாவிகள் பாதிக்கப்பட்டால் நடவடிக்கைஎடுக்காதஇந்த அரசை கண்டிக்கிறோம். ஆகவே ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் ஒரு செயல்படாத அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை போக்குவதற்கு பொதுமக்கள் எடப்பாடியார் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று பேசினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நார்த்தாமலை ஆறுமுகம், அதிமுக ஒன்றிய செயலாளர் கோமாபுரம் பாண்டியன், ரெத்தினவேல், கார்த்திக், குமார், முன்னாள் ஒன்றிய செயலாளர் ரெங்கராஜன், நகர செயலாளர் அய்யா செந்தில்குமார், மாவட்ட பாசறை செயலாளர் கருப்பையா, மாவட்ட பிரதிநிதிகள் கவிதா, சிவா, பகட்டுவன்பட்டி சக்திவேல், விராலிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், சங்கம் விடுதி ஊராட்சி மன்ற தலைவர் பெருமாள், மாவட்ட பாசறை இணைச் செயலாளர், அரவம்பட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அருண் பிரசாத் மற்றும் திரளான அதிமுக தொண்டர்களும், பெண்களும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# புளியங்குடியில் ரூ. 15 லட்சம் மதிப்பீட்டில் நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடம் திறப்பு விழா



தென்காசி : பிப். 2–

தென்காசி மாவட்டம், புளியங்குடியில் கற்பக வீதி தெருவில் பள்ளி கல்வித்துறை நிதியில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் புதிய நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

நகராட்சி ஆணையாளர் சுமா, வட்டார கல்வி அலுவலர் ராமச்சந்திரன் தலைமை வகித்தனர். வட்டார கல்வி அலுவலர்கள் மாரியப்பன், செல்வி, தனலட்சுமி, வட்டார மேற்பார்வையாளர் முகைதீன் அப்துல் காதர், நகராட்சி பொறியாளர் பி.வி.பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி எம்பி தனுஷ் எம் குமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.சதன் திருமலை குமார், புளியங்குடி நகர் மன்ற தலைவி விஜயா, திமுக நகர செயலாளர் ஆ.அந்தோணிசாமி ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, பள்ளியில் தேசியக் கொடி ஏற்றி, கல்வெட்டை திறந்து வைத்தனர்.

கற்பக வீதி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெஸி ஏஞ்சலின் வரவேற்புரையாற்றினார். அகம் அரசு அலுவலர் நலச் சங்க செயலாளர், ஆசிரியர் மருதுபாண்டியன் விழா தொகுப்புரை நிகழ்த்தினார். தேனி வட்டார கல்வி அலுவலர் ராஜமுருகன், தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் செய்யது இப்ராஹிம் மூசா, அரசு ஒப்பந்ததாரர்கள் சிவஞான பாண்டியன், முனியாண்டி, நகராட்சி பள்ளி தலைமை ஆசிரியை சாந்தி, முத்துலட்சுமி, மருதம் அறக்கட்டளை கற்பகராஜ், கார்த்திகா மகேஷ், பரமசிவம், அக்ரி சந்திரன், மதிமுக நகர செயலாளர் ஷாஹிர் உசேன், மகேஸ்வரி, சுகந்த அன்பு, ஒருசொல்மாடசாமி, ஏ.எஸ். அருணாச்சலம், சங்கர், எம். இஸ்மாயில் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். கற்பகவீதி தொடக்கப் பள்ளி ஆசிரியை பி.தனம் நன்றியுரையாற்றினார். நிறைவாக ஆசிரியர் மருது பாண்டியன் அனைவரையும் வரவேற்று சால்வை அணிவித்துசிறப்பு செய்தார்.

# அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரியின் ஜாமின் மனு பிப். 5–க்கு ஒத்திவைத்தது திண்டுக்கல் நீதிமன்றம்



திண்டுக்கல் : பிப். 2–


அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரியின் ஜாமின் மனு மீதான விசாரணையை பிப். 5–க்கு ஒத்திவைத்து திண்டுக்கல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திண்டுக்கல் அரசு மருத்துவர் சுரேஷ் பாபு மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக பல கட்டங்களாக பேரம் பேசி, மிரட்டல் விடுத்து, ரூ.20 லட்சம் லஞ்சம் வாங்கியபோது அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். ஒரு அமலாக்கத்துறை அதிகாரி, மாநில லஞ்ச ஒழிப்புத்துறையால் கைது செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கில் ஜாமீன் கேட்டு அங்கித் திவாரி மனுக்களை தாக்கல் செய்தார்.

அந்த மனுக்களை திண்டுக்கல் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவை தள்ளுபடி செய்தது. அங்கித் திவாரிக்கு வரும் பிப்ரவரி 7ம் தேதி வரையில் நீதிமன்ற காவலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அங்கித் திவாரி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், 2 வது முறையாக ஜாமின் கோரி திண்டுக்கல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நேற்று திண்டுக்கல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அதில் இந்த ஜாமின் மனு மீதான விசாரணையை பிப்ரவரி 5க்கு திண்டுக்கல் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

# சாலை விரிவாக்கத்துக்கு சொந்த வீட்டை இடித்து ஒப்படைத்த பாஜக எம்.எல்.ஏ

சமூக வலைதளங்களில் குவியும் பாராட்டு



ஹைதராபாத் : பிப். 2–

சாலை விரிவாக்கப் பணிக்காக, பாஜக எம்.எல்.ஏ. ஒருவர், தனது வீட்டை அவரே ஜேசிபி இயந்திரம் வைத்து இடித்து தரைமட்டமாக்கி மாநகராட்சியிடம் ஒப்படைத்துள்ளார்.

தெலங்கானா மாநிலம், காமாரெட்டி மாவட்டம், வண்டலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ரமணா ரெட்டி. இவர் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில், காமாரெட்டி தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்டார். இதே தொகுதியில் முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவ் மற்றும் தற்போதைய முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆகிய இருவரையும் தோற்கடித்து வெற்றி பெற்றார். இதனால் அனைவரின் கவனத்தையும் ரமணா ரெட்டி ஈர்த்தார்.

இந்நிலையில், மாஸ்டர் பிளான் திட்டப்படி தற்போது காமாரெட்டி பகுதியில் சாலைகளை 80 அடிக்கு அகலப்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இதனால், பலர் தங்களது வீடு, கடைகளை இழக்க நேரிட்டுள்ளது. இந்நிலையில், வண்டலூர் கிராமத்தில் உள்ள தனது சொந்த வீட்டையும் எம்.எல்.ஏ. இடிக்க வேண்டி வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை ஜேசிபி இயந்திரம் மூலம் தனது வீட்டை ரமணா ரெட்டியே முன் நின்று இடித்து தரைமட்டமாக்கினார்.

இது குறித்து ரமணா ரெட்டி செய்தியாளர்களிம் கூறும்போது, "மக்களின் நலனே எனக்கு முக்கியம். நான் ஒன்றும் பெரிய தியாகத்தை செய்துவிடவில்லை. மக்களுக்கோ, அதிகாரிகளுக்கோ ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. ஆனால், மக்களுக்கு ஒரு வேண்டுகோள். இதேபோன்று சாலையை அகலப்படுத்தும் திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும்'' என்றார். பாஜக எம்.எல்.ஏ.ரமணா ரெட்டியின் இந்த செயல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

நாட்டில் ஏழைகள், பழங்குடியினர், அப்பாவி மக்களை ஒடுக்கும்

# சர்வாதிகாரத்தை எதிர்த்து போரிட ஜார்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் அழைப்பு



டெல்லி : பிப். 2–

நாட்டில் ஏழைகள், பழங்குடியினர் மற்றும் அப்பாவி மக்களை ஒடுக்கும் சர்வாதிகாரத்தை எதிர்த்து போரிட ஜார்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் அழைப்பு விடுத்துள்ளார்.

நில மோசடி வழக்கில் ஹேமந்த் சோரன் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய அமலாக்கத்துறை, நேற்று முன்தினம் புதன்கிழமை அவரை அதிரடியாக கைது செய்தது. இந்த நிலையில், அமலாக்கத்துறை தன்னை கைது செய்ய போவதை குறிப்பிட்டு சோரன், தனது வீட்டில் பதிவுசெய்த காணொளி வெளியாகி உள்ளது.

அதில், எந்த ஆதாரமும் இல்லாமல் அமலாக்கத்துறை தன் மீது குற்றச்சாட்டை வைத்து இருப்பதாக சோரன் கூறியிருந்தார். தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனே டெல்லி வீட்டில் சோதனை நடத்தப்பட்டதாக குற்றம் சாட்டிய அவர், ஏழைகள், பழங்குடியினர் மற்றும் அப்பாவி மக்களை ஒடுக்கும் சர்வாதிகாரத்தை எதிர்த்து போராடுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அமலாக்கத்துறையின் இந்த செயலால் துவண்டு விடமாட்டேன் என்று சூளுரைத்துள்ள ஹேமந்த் சோரன், புதிய யுத்தத்தை முன்னெடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்றும் இந்த வழக்கில் உண்மை நிச்சயம் வெளிவரும் என்றும் கூறினார். இந்த நிலையில் கைது நடவடிக்கை எதிராக உச்சநீதிமன்றத்தில் ஹேமந்த் சோரன் முறையீடு செய்துள்ளார். இந்த மனு இன்று விசாரணைக்கு வருகிறது.

# நாடாளுமன்றத்தில் அத்துமீறல் வழக்கில் கைதான இளைஞர்கள் பரபரப்பு புகார் எதிர்கட்சிகளுடன் தொடர்பு என கூறச்சொல்லி மின்சாரம் பாய்ச்சி கொடுமை



டெல்லி : பிப். 2, எதிர்கட்சிகளுடன் தொடர்பு இருப்பதாக ஒப்புக்கொள்ள வலியுறுத்தி டெல்லி சிறப்பு காவல்துறையினர் தங்கள் உடலில் மின்சாரம் பாய்ச்சி கொடுமைப்படுத்தியதாக நாடாளுமன்ற அத்துமீறல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் நீதிமன்றத்தில் பரபரப்பு புகார் அளித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் வண்ண குப்பிகள் வீசி அத்துமீறலில் ஈடுபட்டது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சாகர் சர்மா, மனோ ரஞ்சன், அமோல் ஷிண்டே, நீலம் தேவி, லலிதா ஜா, மகேஷ் குமாவத் ஆகியோர் டெல்லி பாட்டியாலா நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆஜர் படுத்தப்பட்டனர்.

அப்போது குற்றம் சாட்டப்பட்ட 6 பேரில் நீலம் ஆசாத் தவிர மற்ற அனைவரும் டெல்லி சிறப்பு காவல் துறையினர் மீது மிக கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். குற்றங்களை ஒப்பு கொள்வதற்கும் சில அரசியல் கட்சிகளின் பெயரை கூற வற்புறுத்தியும் உடலில் மின்சாரம் பாய்ச்சி சித்தரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர்கள் குற்றச்சாட்டியுள்ளனர். ஒவ்வொருவரிடம் பல்வேறு தருணங்களில் சுமார் 70 வெற்று பக்கங்களில் கையெழுத்திட காவலர்கள் வற்புறுத்தியதாகவும் கூறினர்.

மேலும், உண்மை கண்டறியும் சோதனைகளின் போது சில அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் பெயரை கூறுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். தங்களது சமூக ஊடக கணக்குகள், மின்னஞ்சல், கடவுச்சொற்கள், தொலைபேசிகளுக்கான பயோ மெட்ரிக் தரவுகளை வழங்க கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. 5 பேரின் குற்றச்சாட்டுகள் குறித்து டெல்லி சிறப்பு காவல்துறையிடம் விளக்கம் கேட்டுள்ள பாட்டியாலா நீதிமன்றம் விசாரணையை பிப்ரவரி 17ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

# தென்காசி அதிமுக தெற்கு, வடக்கு மாவட்ட கழகம் சார்பில் பட்டியல் இன பெண்ணுக்கு நடந்த கொடுமையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி : பிப். 2–

பல்லாவரம் திமுக எம்எல்ஏ கருணாநிதி மகன் வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்த பட்டியல் இன பெண்ணை கொடுமைப்படுத்திய எம்எல்ஏ மகன், மருமகள் ஆகியோரை கண்டித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவின் பேரில் தென்காசி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டம் சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு தெற்கு மாவட்ட கழக செயலாளர் செல்வமோகன்தாஸ் பாண்டியன், வடக்கு மாவட்ட கழக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான செ.கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பா தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தென்காசி நகர கழக செயலாளர் சுடலை வரவேற்புரையாற்றினார். கழக மகளிரணி துணை செயலாளர் வி.எம்.ராஜலட்சுமி, கழக அமைப்பு செயலாளர் பி.ஜி.ராஜேந்திரன், தெற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.ஆர். பி.பிரபாகரன், திருநெல்வேலி மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் முனைவர் சிவ ஆனந்த் ஆகியோர் கண்டன உரையாற்றினார். தென்காசி தெற்கு மாவட்ட அவைத்தலைவர் சண்முகசுந்தரம் தொகுத்து வழங்கினார். வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் பொய்கை சோ.மாரியப்பன் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் வி.பி. மூர்த்தி, சண்முகப்ரியா, சத்திய கலா தீபக், முத்துலெட்சுமி, பசுவதி சாமிநாத பாண்டியன், சண்முகையா, மாவட்ட சார்பு அணி செயலாளர்கள் காத்தவராயன், கண்ணன் (எ) ராஜீ, சந்திரகலா, கிருஷ்ணசாமி, பரமகுருநாதன், குத்தாலிங்கம், சிவசீத்தாராம், ஒன்றிய செயலாளர்கள் சங்கரபாண்டியன், இருளப்பன், அருள்வேல்ராஜன், முருகேசன், சுப்பிரமணியன், எஸ்.ஆர். ராமசந்திரன், செல்லப்பன், வசந்தம் முத்துபாண்டி, ரமேஷ், வேல்முருகன், மகாராஜன், துரைபாண்டியன், செல்வராஜ், நகர கழக செயலாளர்கள் கணேசன், எம்.கே.முருகன், ஆறுமுகம் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் சக்திவேல், பேரூர் செயலாளர்கள் வழக்கறிஞர் கார்த்திக்குமார், குற்றாலம் பேரூராட்சி மன்றத் தலைவர் கணேஷ் தாமோதரன், ஜெயராமன், பாலசுப்பிரமணியன், நல்லமுத்து, முத்துகுட்டி, சங்கர், சுப்பிரமணியன், அலியார், வில்சன் கார்த்திக், ரவி, பொதுக்குழு உறுப்பினர்கள் கச.முத்து, காளிராஜ், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் ஞானராஜ், வாவை ஜாஹீர் உசேன், தனபால், உச்சிமாகாளி (எ) துப்பாக்கி பாண்டியன், எஸ்.எம்.மைதீன், ரவிச்சந்திரன், பாஸ்கர், கருப்பையா தாஸ், காதர், பாலமுருகன், மாரிமுத்து, சேர்மபாண்டி, முருகன்ராஜ், தமிழ் (எ) ராமசாமி, வழக்கறிஞர்கள் செல்லத்துரை பாண்டியன், சிவகுமார், சுப்பிரமணியன், அருண் ரெங்கராஜ், ராமேஸ்வரன், தமிழ்மணி ரஞ்சித்குமார், அண்ணா தொழிற்சங்க மண்டல முன்னாள் செயலாளர் கந்தசாமி பாண்டியன், மண்டல செயலாளர் ராமையா, விபத்து பிரிவு செயலாளர் பாலசுப்ரமணியம், பழனிச்சாமி, அய்யப்பன், முன்னாள் செயலாளர்கள் முத்தழகு, கிட்டுராஜா, சங்கரபாண்டியன், உள்ளாட்சி பிரதிநிதிகள் சங்கரசுப்பிரமணியன், சரவணகுமார், புவனாசுரேஷ், உமா மகேஸ்வரன், தங்கபாண்டியன், சரவணன், முருகன் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், கிருஷ்ணாபுரம் ராஜேந்திரபிரசாத், இடைகால் செல்லப்பா, முருகேசன், சரவணன், சங்கர் அய்யப்பன், வெங்கடேஷ், சௌந்தர் (எ) ஷாகுல் ஹமீது, சந்திரகுமார், ஜெயகுமார், அமுல்ராஜ், பாலகிருஷ்ணன், ஊத்துமலை இளைய ஜமீன்தார் குமரேசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் குத்தாலிங்கராஜன் (எ) கோபி, ஐவராஜா திப்பணம்பட்டி ராமசாமி, வாசுதேவநல்லூர் சசிகுமார், கண்ணன், ராஜ்குமார், செந்தில்குமார், கண்ணன், சுப்புராஜ், முத்து விருமாண்டி, தென்காசி நகர நிர்வாகிகள் வெள்ளபாண்டி, முத்துக்குமாரசுவாமி, மைமூன் பீவி, காமராஜ் ,சுப்பிரமணியன், கருப்பசாமி, ராஜா, குருசாமி வார்டு செயலாளர்கள் சுடலைமணி, செல்வராஜ், ஒய். ஜி.மாரியப்பன், காதர் மைதீன், திருமலைச்சாமி தேவர், கணபதி தமிழ்ச்செல்வன், காஜா மைதீன், அகமது ஷா, மனோகர், கனகசபாபதி, கல்யாணகுமார், இசக்கி ராஜா, ராமதாஸ், செய்யது அலி பாதுஷா, ஹைதர் அலி, தங்கம், பாலசுப்பிரமணியன், மகேஸ்வரன், சக்தி மணிகண்டன், முத்து சிதம்பர ஐயப்பன், இந்திரன், குணசேகரன், பாலாஜி, உதயகுமார், முகமது ஹனீபா, முருகையா, சுப்பிரமணியன், ஸ்டீல் மாரியப்பன், சாமி ஆசாரி, கிருஷ்ணராஜா, பாலசுப்பிரமணியன், நெசவு முகமது அலி, ஐதுரூஸ், சந்துரு, முருகன், அழகிரி, கோட்டியப்பன், ஆறுமுகம், அய்யப்பன், கிருஷ்ணன், முருகன், ஷேக், சுப்பிரமணியன், முருகையா, காளையப்பன், நிவாஸ், ராஜாமுகமது, வெங்கடேஷ், சந்தோஷ், முருகன், முனுசாமி, தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் தர்மா, மதன்குமார், சங்கர், செல்வகுமார், ஜோயல்துரை, கதிர்வேல்ராஜ், சதீஷ் குமார், மாரியப்பன், சரவணன், அஸ்வின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# நான் டென்னிஸ் களத்திற்கு மீண்டும் திரும்புவேன்

## முன்னாள் நம்பர் 1 வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ்



**கலிபோர்னியா : பிப். 2, அமெரிக்காவை சேர்ந்த 43 வயதான அவர், கடந்த ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.**

முன்னாள் நம்பர் 1 வீராங்கனையும், கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 7 முறை சாம்பியன் பட்டம் வென்றவருமான வீனஸ் வில்லியம்ஸ் மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்புவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த 43 வயதான அவர், கடந்த ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். அதன்பின் காயம் காரணமாக எந்த வித போட்டிகளிலும் பங்கேற்காமல் இருந்தார். இந்நிலையில் காயத்திலிருந்து மீண்டு வரும் அவர் இந்த ஆண்டு நடைபெற உள்ள இந்தியன் வேல்ஸ் மற்றும் மியாமி ஓபன் டென்னிஸ் தொடர்களில் பங்கேற்பதை இலக்காக கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ‘ நான் டென்னிஸ் களத்திற்கு மீண்டும் திரும்புவேன். எனது காயங்கள் குறித்து விளக்க விரும்பவில்லை. ஏனெனில் தோல்விக்கு அதை காரணமாக கூறுவதை நான் வெறுக்கிறேன். இப்போதைக்கு என்னுடைய பெரிய இலக்கு இந்தியன் வேல்ஸ் மற்றும் மியாமி ஓபன் தொடர்களில் பங்கேற்பது மட்டுமே. அந்த தொடர்களில் கடந்த 3 வருடங்களாக நான் விளையாடவில்லை. மேலும் டென்னிஸ் களத்தில் சாதிக்க எனக்கு நிறைய இலக்குகள் உள்ளன’ என்று கூறினார்.

# பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய பாய்மரப்படகு வீரர் விஷ்ணு சரவணன் தகுதி



**அடிலெய்டு : பிப். 2, விஷ்ணு சரவணன் தொடர்ந்து 2 ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி கண்ட முதல் இந்திய பாய்மரப்படகு வீரர் என்ற சிறப்பையும் பெற்றுள்ளார்.**

உலக பாய்மரப்படகு சாம்பியன்ஷிப் போட்டி ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்டில் நடந்தது. இதில் சர்வதேச லேசர் கிளாஸ் பிரிவு பந்தயத்தில் 152 வீரர்கள் கலந்து கொண்டனர். இதன் 11 பந்தயங்கள் முடிவில் மொத்தம் 174 புள்ளிகள் குவித்த இந்திய வீரர் விஷ்ணு சரவணன் 26-வது இடத்தை தனதாக்கினார். இதன் மூலம் ஆசிய அளவிலான ரேங்கிங்கில் முன்னிலை பெற்ற விஷ்ணு சரவணன் பாரீசில் ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதம் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார்.

வேலூரை சேர்ந்த 24 வயதான விஷ்ணு சரவணன் மும்பையில் ராணுவத்தில் பணியாற்றி வருகிறார். 21 வயதுக்கு உட்பட்ட உலக சாம்பியன்ஷிப் (2019-ம் ஆண்டு) மற்றும் ஆசிய விளையாட்டு போட்டியில் (2023) வெண்கலப்பதக்கம் வென்று இருக்கும் விஷ்ணு சரவணன் டோக்கியோ (2021) ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்று இருந்தார். பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற முதல் இந்திய பாய்மரப்படகு வீரர் என்ற பெருமையை பெற்று இருக்கும் விஷ்ணு சரவணன் தொடர்ந்து 2 ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி கண்ட முதல் இந்திய பாய்மரப்படகு வீரர் என்ற சிறப்பையும் சொந்தமாக்கினார்.

# விராட் கோலி மட்டும் கேப்டனாக இருந்திருந்தால் இந்தியா தோற்றிருக்காது – இங்கிலாந்து முன்னாள் கேப்டன்



**லண்டன் : பிப். 2, டெஸ்ட் கிரிக்கெட்டில் விராட் கோலியின் கேப்டன்சியை இந்தியா தவறவிட்டுள்ளதாக இங்கிலாந்து முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 28 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது. இந்த போட்டியில் முதல் இன்னிங்சில் இந்திய அணி முன்னிலை பெற்றது. ஆனால் 2வது இன்னிங்சில் இங்கிலாந்து நிர்ணயித்த 231 ரன்களை சேசிங் செய்த இந்தியா மோசமான பேட்டிங்கை வெளிப்படுத்தி 202 ரன்களுக்கு ஆல் அவுட்டாகி தோல்வியை சந்தித்தது.

இந்த போட்டியில் இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா குறித்த விமர்சனங்கள் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. ஏனெனில் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் ஆரம்பத்திலேயே தடுமாறிய நிலையில், ஒல்லி போப் தனி ஒருவராக அணியை வலிமையான இலக்கை நோக்கி அழைத்துச்சென்றார். ஆனால் இந்திய அணி வீரர்களால் ஒல்லி போப்பை தடுக்க முடியாமல் தடுமாறினர். அதிலும் அவர் கொடுத்த கேட்சுகளை தவறவிட்டனர். இதற்கு கேப்டனாக ரோகித் சர்மா சரிவர செயல்படாததே காரணம் என குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றது.

இந்நிலையில் ரோகித் சர்மாவின் கேப்டன்சி குறித்து பேசியுள்ள இங்கிலாந்து முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன், “இந்திய டெஸ்ட் அணி விராட் கோலியின் கேப்டன்சியை பெரிதும் இழந்துள்ளது. இந்த போட்டியில் விராட் கோலி அணியின் கேப்டனாக செயல்பட்டிருந்தால் நிச்சயம் இந்திய அணி தோல்வியைத் தழுவி இருக்காது. ரோகித் சர்மா ஒரு ஜாம்பவான் வீரர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் தற்போது செயலிழந்து விட்டதாக உணர்கிறேன்” என்று அவர் தெரிவித்தார்.

மேலும் ரோகித் சர்மாவின் கேப்டன்ஷிப் மிகமிக சராசரியாக இருந்ததாக நான் கருதுகிறேன். களத்தில் அவர் சரியான திட்டங்களை தீட்டியதாகவோ அல்லது பந்து வீச்சு மாற்றங்களில் முனைப்புடன் இருந்ததாகவோ எனக்கு தெரியவில்லை” என்று மைக்கேல் வாகன் கூறினார்.

# சுப்மன் கில், ஸ்ரேயாஸ் அய்யர் விரைவில் ரன் குவிக்க தொடங்கி விடுவார்கள் – விக்ரம் ரத்தோர்



**விசாகப்பட்டினம் : பிப். 2, இந்தியாவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.**

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையேயான 2-வது போட்டி விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற உள்ளது.

இதில் ஐதராபாத்தில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இந்தியா 28 ரன்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சிகரமாக தோல்வியை தழுவியது. இளம் பேட்ஸ்மேன் சுப்மன் கில் இரு இன்னிங்சிலும் சொதப்பினார். தனது கடைசி 11 இன்னிங்சில் ஒரு அரைசதம் கூட அடிக்காத சுப்மன் கில் விசாகப்பட்டினத்தில் இன்று தொடங்கும் 2-வது டெஸ்டில் ரன் குவிக்க வேண்டிய நெருக்கடியில் தவிக்கிறார்.

இதையொட்டி இந்திய அணியின் பேட்டிங் பயிற்சியாளர் விக்ரம் ரத்தோர் நேற்று முன்தினம் புதன்கிழமை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:- நமது அணியில் இளம் பேட்டர்கள் நிறைய பேர் உள்ளனர். அவர்கள் அதிக அளவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடியதில்லை. எனவே அவர்கள் விஷயத்தில் நாம் கொஞ்சம் பொறுமை காக்க வேண்டியது அவசியம். சுப்மன் கில், ஸ்ரேயாஸ் அய்யர் போன்ற பேட்ஸ்மேன்கள் விரைவில் ரன் குவிக்க தொடங்கி விடுவார்கள். நிச்சயம் இது நடக்கும்.

மன உறுதியுடன் நிலைத்துநின்றுஆடுவதற்கும், தாக்குதல் பாணியில் விளையாடுவதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. இந்திய வீரர்கள் மிகுந்த கவனத்துடன் தீர்க்கமான பேட்டிங்கை வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன். அதே சமயம் ரன் எடுக்க கிடைக்கும் வாய்ப்பையும் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆடுகளத்தன்மை மற்றும் சீதோஷ்ண நிலையை ஆராய்ந்து, அதற்கு ஏற்ப இங்கு எப்படி விளையாட வேண்டும், எந்த மாதிரி அடித்தால் இந்த ஆடுகளத்தில் நன்றாக இருக்கும் என பேட்ஸ்மேன்கள் சாதுர்யமாக சிந்தித்து செயல்பட வேண்டியது அவசியம்’ என்று கூறினார்.

# “இப்படி செய்திருக்க வேண்டும்” – ‘மலைகோட்டை வாலிபன்’ தோல்வி குறித்து லிஜோ ஜோஸ்



**கொச்சி : பிப். 2, ‘மலைக்கோட்டை வாலிபன்’ படத்துக்கு வரும் எதிர்மறை விமர்சனங்கள் குறித்து இயக்குநர் லிஜோ ஜோஸ் பெல்லிசேரி மனம் திறந்துள்ளார்.**

மலையாளத்தில், ‘ஜல்லிக்கட்டு’, ‘அங்கமாலி டைரிஸ்’, ‘சுருளி’, ‘நண்பகல் நேரத்து மயக்கம்’ படங்கள் மூலம் கவனம் பெற்ற லிஜோ ஜோஸ் பெல்லிசேரியின் புதிய படம் ‘மலைக்கோட்டை வாலிபன்’. இப்படம் கடந்த ஜனவரி 25ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது. ஆனால் வெளியான நாள் முதலே இப்படத்துக்கு கடுமையான நெகட்டிவ் விமர்சனங்கள் வெளியாகின.

இந்த விமர்சனங்கள் குறித்து சமீபத்திய பேட்டி ஒன்றில் இயக்குநர் லிஜோ ஜோஸ் பெல்லிசேரி மனம் திறந்துள்ளார். அதில் அவர் கூறிருப்பதாவது: இப்படி ஒரு முயற்சியை மேற்கொள்ளும்போது, அதை கொண்டாட வேண்டும் என்று சொல்லவில்லை. விமர்சனங்களும் வரவேற்கப்பட வேண்டியவைதான். ஆனால் படம் வெளியான முதல் இரண்டு நாட்களில் அது தொடர்பான விவாதங்கள் திசைமாறிச் சென்றன.

முதல் இரண்டு நாட்கள் வந்த கருத்துகள் எல்லாம், ‘எனக்கு படம் பிடிக்கவில்லை, எனவே மற்றவர்களும் இதனை பார்க்கக்கூடாது’ என்கிற ரீதியில் இருந்தன. கடந்த ஒன்றரை ஆண்டுகளால இத்தனை பேர் போட்ட உழைப்பு காணாமல் போய், மிக மோசமான மலையாளப் படம் என்ற பெயர் மட்டுமே எஞ்சியிருந்தது. அது எனக்கு மிகவும் வருத்தத்தை கொடுத்தது. அதனால் தான் நான் மீடியாவை அழைத்து, ஏன் இந்த படத்தை பார்க்க வேண்டும் என்று விளக்கினேன். இப்படி நான் இதற்கு முன்பு செய்ததே இல்லை. ஒரு படத்துக்காக மக்கள் ஒருவர் மீது ஒருவர் கல்லெறிவதை நான் விரும்பவில்லை. நீங்கள் படம் பார்க்க விரும்பவில்லை என்றால் பார்க்காதீர்கள், ஆனால் மற்றவர்களையும் பார்க்க வேண்டாம் என்று கட்டாயப்படுத்தாதீர்கள்.

பார்வையாளர்கள் இப்படத்தைப் பற்றி புரிந்துகொள்ளு வகையில் இன்னும் விரிவான ஒரு டிரெய்லரை நாங்க வெளியிட்டிருக்க வேண்டும்” என்று லிஜோ ஜோஸ் கூறியுள்ளார்.

வரலாறு சினிமா

# தாய்க்காக மினி தாஜ்மகால் கட்டிய ஏ.ஆர்.ரஹ்மான்



**சென்னை : பிப். 2, தாய் மீது அதிக பாசம் கொண்டவர் ஏ.ஆர்.ரஹ்மான். ரஹ்மானின் தாய் கரீமா பேகம் கடந்த 2022-ம் ஆண்டு மரணமடைந்தார்.**

தன் தாய்மீதுள்ள அன்பை வெளிப்படுத்தும் விதமாக அவருக்காக தாஜ்மகால் போன்ற தோற்றம் கொண்ட ஒரு நினைவிடத்தை ரஹ்மான் கட்டி இருக்கிறார். சென்னையில் அமைந்துள்ள இந்த நினைவிடத்துக்கு சமீபத்தில் எழுத்தாளர் நாகூர் ரூமியை அழைத்துச் சென்றுள்ளார் ரஹ்மான். அங்கு சென்ற அனுபவத்தை நாகூர் ரூமி வியப்புடன் பகிர்ந்துள்ளார்.

அவர் கூறியது:ரஹ்மானின் அழைப்பை ஏற்று அவரது வீட்டுக்கு சென்றேன். அவரது உதவியாளர், மேலும் சிலர் இருந்தனர். பின் ரஹ்மான் உள்பட நாங்கள் எல்லோரும் ஒருவேனில் ஏறிக்கொண்டோம். வேன் ரெட்ஹில்ஸுக்கு அருகில் இருந்த ஒரு இடத்துக்குச் சென்றது. அங்கேதான் ரஹ்மானின் அன்பு அன்னையின் அடக்கஸ்தலமிருந்தது. ஆனால், ஏதோ தாஜ் மகாலுக்கு வந்துவிட்ட மாதிரி இருந்தது. நான் இன்னும் தாஜ் மகாலைப் பார்க்கவில்லை. அவ்வளவு அழகாக அந்த இடம் இருந்தது. வெகுநேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கே சில படங்கள் அவரோடு எடுத்துக்கொண்டோம். அவர் அம்மாவின் அடக்கஸ்தலத்தை மிகவும் ‘ரிச்’ ஆக வைத்திருந்தார். அடக்கஸ்தலத்தின்மீது போர்த்தப்பட்டிருந்த போர்வையின் அழகு கண்ணைக்கவர்ந்தது. அதற்கு நேர் எதிரே அம்மாவின் வரைபடம் ஒன்றும் இருந்தது. யாரோ ஒருவர் குர்’ஆன் ஓதிக்கொண்டே இருந்தார். அங்கிருந்த டேப்பில் திருமறை ஓதப்படும் சப்தம் கேட்டுக்கொண்டே இருக்க ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

# கதையின் நாயகனாக புகழ் நடிக்கும் ’மிஸ்டர் ஜூ கீப்பர்’



**சென்னை : பி. 2, நகைச்சுவை நடிகர் புகழ், கதையின் நாயகனாக நடிக்கும் படம், ‘மிஸ்டர் ஜூ கீப்பர்’.**

ஜெ4 ஸ்டுடியோ சார்பில் எஸ்.ராஜரத்தினம் மற்றும் டி. ஜெப ஜோன்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தை ஜெ. சுரேஷ் இயக்கியுள்ளார். யுவன் ஷங்கர் ராஜா இசை அமைத்துள்ளார். தன்வீர் மொய்தீன் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஷிரின் காஞ்ச்வாலா நாயகியாக நடித்துள்ளார். சிங்கம்புலி, விஜய் சீயோன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

பிப்ரவரி மாதம் வெளியாகும் இந்தப் படம் பற்றி நடிகர் புகழ் கூறியதாவது: மலையடிவாரத்தில் வசிக்கும் அப்பாவியான ஒருவன் பூனை என்று நினைத்து புலிக்குட்டி ஒன்றை வளர்க்கிறான். இதனால் அவன் சந்திக்கும் சவால்கள் என்ன, அவற்றை அவன் எப்படி எதிர்கொள்கிறான் என்பதுதான் படம். காடுகளைப் பாதுகாப்பது பற்றியும் நகைச்சுவையோடு குழந்தைகள் கொண்டாடும் வகையிலும் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

வனவிலங்குகள் எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால் இந்தக் கதாபாத்திரத்துக்காக அணுகிய போது மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் புலியுடன் நடிப்பது அவ்வளவு எளிதான விஷயமில்லை என்பதை படப்பிடிப்பில் உணர்ந்தேன். தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸில், புலி தொடர்பான காட்சிகளைப் படமாக்கினோம். புலி, எப்போது என்ன மூடில் இருக்கும் என்பது தெரியாது. போதிய பயிற்சி மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் படப்பிடிப்பு நடைபெற்றது. இந்தக்கதையில் நாயகனாக நடித்தாலும் தொடர்ந்து காமெடி மற்றும் குணசித்திர வேடங்களில் நடிப்பேன். என்று புகழ் கூறினார். இந்தப் படம் தாய்லாந்தில் ‘நாய் சாவ்ன் சத்வ்’ என்ற பெயரிலும் மலாய் மொழியில் ‘என்சிக் பென்ஜகா ஜூ’ என்றும் வெளியாக இருக்கிறது.

# நெதர்லாந்தில் ‘விடுதலை’ படத்துக்கு பெரும் வரவேற்பு எழுந்து நின்று 5 நிமிடம் கைதட்டிய பார்வையாளர்கள்



**ரோட்டர்டாம் : பிப். 2, நெதர்லாந்து நாட்டில் நடைபெற்று வரும் ரோட்டர்டாம் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட ‘விடுதலை பாகம் 1 & 2’ படங்களுக்கு பார்வையாளர்கள் எழுந்து நின்று தொடர்ந்து 5 நிமிடங்கள் கைதட்டி பாராட்டினர்.**

53-வது ரோட்டர்டாம் உலகத் திரைப்பட விழா நெதர்லாந்து நாட்டின் தலைநகர் ரோட்டர்டாம் நகரில் நடைபெற்று வருகிறது. கடந்த ஜன.25 முதல் தொடங்கிய இந்த விழா வரும் பிப்.4ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமான திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. அந்த வகையில் தமிழ் சினிமாவிலிருந்து ராம் இயக்கத்தில் நிவின் பாலி, சூரி நடித்துள்ள ‘ஏழு கடல் ஏழு மலை’, வெற்றிமாறன் இயக்கியுள்ள, ‘விடுதலை பாகம் 1 & 2’, கார்த்திக் சுப்புராஜின் ‘ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ்’ ஆகிய படங்கள் திரையிடப்படுகின்றன.

அண்மையில் இந்த விழாவில் ராமின் ‘ஏழு கடல் ஏழு மலை’ படம் திரையிடப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை வெற்றிமாறன் இயக்கத்தில் விஜய் சேதுபதி, சூரி நடித்துள்ள ‘விடுதலை’ படத்தின் இரண்டு பாகங்களும் திரையிடப்பட்டன. இப்படங்களின் இறுதியில் பார்வையாளர்கள் எழுந்து நின்று தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் கைதட்டினர். மேலும் இந்த திரையிடல் நிகழ்வில் கலந்துகொண்ட இயக்குநர் வெற்றிமாறன், நடிகர்கள் விஜய் சேதுபதி, சூரி ஆகியோருக்கும் பார்வையாளர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

‘விடுதலை’ படத்தின் முதல் பாகம் கடந்த ஆண்டு மார்ச் 31-ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இதில் சூரி, விஜய் சேதுபதி முதன்மை கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். தவிர, பவானி ஸ்ரீ, பிரகாஷ்ராஜ், கவுதம் வாசுதேவ் மேனன், ராஜீவ் மேனன், சேத்தன் உட்பட பலர் நடித்திருந்தனர். இளையராஜா இசையமைத்திருந்தார். வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்திருந்த இந்தப் படம் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

இந்தப் படத்தின் அடுத்த பாகத்தின் பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. இதில் விஜய் சேதுபதி ஜோடியாக மஞ்சு வாரியர் நடிக்கிறார். இப்படம் இந்த ஆண்டு இறுதியில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ‘வித்தைக்காரன்’ படத்தில் 2 வேடங்களில் சீரியஸ் கதாபாத்திரத்தில் சதீஷ்




**சென்னை : பிப். 2, காமெடி நடிகர் சதீஷ், சீரியஸ் கதாபாத்திரத்தில் நடிக்கும் படம், ‘வித்தைக்காரன்’. லோகேஷ் கனகராஜிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய வெங்கி இயக்குகிறார்.**

இதில் சிம்ரன் குப்தா, தாரிணி, ஆனந்தராஜ், மதுசூதனன், சுப்ரமணியம் சிவா உட்பட பலர் நடிக்கின்றனர். ஒயிட் கார்பெட் பிலிம்ஸ் சார்பில் கே.விஜய் பாண்டி தயாரித்துள்ளார். விபிஆர் இசையமைத்துள்ள இந்தப் படத்துக்கு யுவா கார்த்திக் ஒளிப்பதிவு செய்துள்ளார். படம் பற்றி வெங்கி கூறியதாவது:

பாதுகாப்பு நிறைந்த, விமான நிலையத்தில் மாட்டிக் கொண்டிருக்கும் ஒரு பொருளை கொள்ளையடிக்க, ஹீரோ உட்பட 3 குழு திட்டமிடுகிறது. யார் அதை எடுக்கிறார்கள் என்பதுதான் படம். சதீஷ், மேஜிக் செய்பவராக இதில் நடிக்கிறார். காமெடியனாக இதுவரை நடித்த அவர், இதில் சீரியஸ் கேரக்டரில் நடித்திருக்கிறார். சீரியஸ் என்றால் பத்துபேரை அடித்து உதைப்பது போன்ற காட்சிகள் இருக்காது. இந்தக் கதைக்கு அவர் பொருத்தமாக இருப்பார். இதில் முதன்முறையாக இரண்டு வேடங்களில் அவர் நடிக்கிறார்.

விமான நிலையம் தொடர்பான காட்சிகளை கோவை விமான நிலையத்திலும் முக்கியமான காட்சிகளை விமான நிலையம் செட் அமைத்தும் எடுத்தோம். சென்னை மெட்ரோ ரயிலிலும் சில காட்சிகளை படமாக்கி இருக்கிறோம். இந்தப் படம் ரசிகர்களுக்கு த்ரில்லிங்கான அனுபவத்தைக் கொடுக்கும். படத்தின் அனைத்து வேலைகளும் முடிந்துவிட்டன. பிப்.23-ம் தேதி வெளியிட இருக்கிறோம் என்று வெங்கி கூறினார்



வரலாறு உலகம்

# குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறியதற்காக பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் மன்னிப்பு கோரினார் மார்க் ஜூக்கர்பர்க்



**வாஷிங்டன் : பிப். 2,**

**முகநூல், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளங்களில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறியதற்காக பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் மெட்டா நிறுவனர் மார்க் ஜூக்கர்பர்க் மன்னிப்பு கோரினார்.**

அமெரிக்காவின் சமூக வலைத்தளங்கள் மூலம் பெண் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பாதிக்கப்படுவது பெரும் பிரச்சனையாக மாறி இருக்கிறது. கடந்த ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் அதிகரிக்கவே மெட்டா உள்ளிட்ட முன்னணி சமூக வலைத்தளங்கள் மீது பல்வேறு மாகாணங்களில் வழக்குப் பதிவானது. இந்த நிலையில் நேற்று அமெரிக்க செனட் சபையில் குழந்தைகளின் பாதுகாப்பு சார்ந்த பல்வேறு பிரச்சனைகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. இதில் மெட்டா, டிக் டாக், எக்ஸ் உள்ளிட்ட பல்வேறு முன்னணி வலைதள நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள் பங்கேற்றனர்.

அப்போது, பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான காட்சி ஒளிபரப்பப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தங்களின் குழந்தைகளின் நிலையை எடுத்துரைத்தனர். தொடர்ந்து வலைத்தளங்களை தவறாக பயன்படுத்தி வன்கொடுமையாளர்கள் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி நடவடிக்கை எடுக்க தவறியதற்காக நிறுவன அதிகாரிகளிடம் கேள்வி கேட்கப்பட்டது.

மெட்டா நிறுவனத்தின் மீதுபல்வேறுகுற்றச்சாட்டுகள் அடுக்கப்பட்ட போது, திடீரென பாதிக்கப்பட்ட குடும்பங்களை நோக்கி திரும்பிய நிறுவனர் மார்க் ஜூக்கர்பர்க், தனது நிறுவனத்தின் தவறுக்காக மன்னிப்பு கோரினார். கூட்டத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதாக நிறுவனங்கள் தெரிவித்ததை தொடர்ந்து அவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில், லாபம் ஈட்டும் நடவடிக்கைகளை இணையதளங்கள் மேற்கொள்ள அமெரிக்க செனட் சபை நீதிக்குழு அறிவுறுத்தியது.

# பொது இடங்களில் ஆபாச பொம்மைகளை வைத்து விளம்பரம் : சர்ச்சையில் சிக்கிய ஜப்பான்




**ஜப்பான் : பிப். 2,**

**ஜப்பானில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் விதமான ஆபாச பொம்மைகளை பயன்படுத்தி விளம்பரம் செய்யப்பட்டது. விலை உயர்ந்த ஆபாச பொம்மைகளை பயன்படுத்தி விளம்பரம் செய்ததற்காக ஜப்பான் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறது.**

ஜப்பானில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் விதமான ஆபாச பொம்மைகளைபயன்படுத்தி விளம்பரம் செய்யப்பட்டது. தற்போது அவை கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகின்றனர். ஜப்பானில் உள்ள டொகுஷிமா மாகாணத்தில் இந்த சம்பவம் நடைபெற்றதாக தெரிவித்துள்ளது. விமான நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அந்த பொம்மைகளுக்கு இண்டிகோ சாயம் பூசிப்பட்டுள்ளது. அது பாரம்பரிய இண்டிகோ சாயமிடுவதை விளம்பரம் செய்வதன் நோக்கமாக வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது.

இதேபோல கடந்த 2017 ஆம் ஆண்டு விளம்பரத்துக்காக சுமார் 180 அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள இரண்டு பொம்மைகளை அதிகாரிகள் வாங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இந்த ஆண்டு விளம்பரத்திற்காக அந்த ஆபாச பொம்மையை வாங்கிய அதிகாரி, அது மக்களின் கவனத்தைஈர்க்கும் என்று தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தற்போது வாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

மினாச்சியின் செய்தி அறிக்கையின் படி, ஆபாச பொம்மைகள் சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் என்ற கூற்று முற்றிலும் தவரானது என அதிகாரிகள் தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளது. மேலும் விளம்பரத்திற்காக விலையுயரந்த பொம்மைகளை வாங்குவது சமூக நெறிமுறைகளுக்கு எதிரானது என தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி பொது இடங்களில் ஆபாச பொம்மைகளை காட்சிப்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் புரிதலை பெற முடியாது என தெரிவித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த மூத்த அதிகாரி ஒருவர், விளம்பரங்களுக்காக இண்டிகோ வண்ணம் பூசப்பட்ட பொம்மைகள் பயன்படுத்தப்படுவது எனக்கு தெரியும், ஆனால் அவை ஆபாச பொம்மைகள் பயன்படுத்துவது குறித்து எனக்கு எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். மேலும் இதே போன்ற ஒரு சம்பவம் தான் ஆளுநராக இருந்தபோதும் நடைபெற்றதாகவும், இந்த விவகாரத்தை கடுமையாக கையாள உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்சூரன்சு தொகைக்காக மகன் கொலை : ரூ.7 ஆயிரம் கோடி போதை பொருள் கடத்தல் – இந்திய தம்பதிக்கு 33 ஆண்டு ஜெயில்



**லண்டன் : பிப். 2,**

**வர்த்தக விமானங்களில் உலகம் முழுவதும் இதுபோன்று 7 டன்கள் அளவிலான போதை பொருட்களை அவர்கள் கடத்திய அதிர்ச்சி விவரம் வெளிச்சத்திற்கு வந்தது.**

இந்திய வம்சாவளியை சேர்ந்த இங்கிலாந்து தம்பதி ஆரத்தி தீர் (வயது 59) மற்றும் அவருடைய கணவர் கவல்ஜித்சின்ஹ ராய்ஜடா (வயது 35). இங்கிலாந்து நாட்டின் லண்டன் நகரில் ஹான்வெல் பகுதியை சேர்ந்தவர்கள். கடந்த 2019 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ரூ.7,393 கோடி மதிப்பிலான கொக்கைன் என்ற போதை பொருளை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர்.

இதுதவிர, இவர்கள் இருவரும் 2017-ம் ஆண்டில் குஜராத்தில் இரட்டை படுகொலைகளை செய்துள்ளனர். இந்த தம்பதியின் தத்தெடுத்த மகனான கோபால் செஜானி (வயது 11), 2017-ம் ஆண்டு குஜராத்தில் வைத்து கடத்தப்பட்டான். அவனை காப்பாற்ற சென்ற ஹர்சுக் கர்தனி என்ற உறவினர் என 2 பேரும் கடுமையாக தாக்கப்பட்டு, கொல்லப்பட்டனர்.

கோபாலை லண்டனுக்கு அழைத்து செல்கிறோம் என ஆசை காட்டி, தத்தெடுத்து வளர்ப்பதுபோல் கூறி விட்டு, குஜராத்தில் ஆள் வைத்து கொலை செய்துள்ளனர். தத்தெடுத்த மகன் மீது இன்சூரன்ஸ்பணம்கட்டிஅந்த தொகையை பெறுவதற்காக அவர்கள் கொலைக்கான திட்டமிட்டது விசாரணையில் தெரிய வந்தது.

இந்தவழக்கில்சதித்திட்டம் தீட்டி கொலை செய்தல் மற்றும் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீதுசுமத்தப்பட்டன. கோபால் செஜானியின் ரூ.1.58 கோடி காப்பீட்டுதொகைக்காக இந்த படுகொலைகள் நடந்துள்ளன.


எனினும், இந்தியாவுக்கு நாடு கடத்துவதில் இருந்து இந்த தம்பதி தப்பியது. அதற்கேற்ப, குஜராத்தில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டால், அது தங்களுடைய மனித உரிமைகளைமீறும்வகையில் இருக்கும் என இங்கிலாந்து கோர்ட்டில் கூறி தப்பினர்.

இந்தசூழலில், இவர்களின் போதை பொருட்கள் கடத்தல் விவரங்களை ஆஸ்திரேலிய அதிகாரிகள் கண்டறிந்து, இங்கிலாந்து தேசிய குற்ற முகமைக்கு (என்.சி.ஏ.) தகவல் அளித்து உஷார்படுத்தினர். இதனை தொடர்ந்து நடந்த சோதனையில், 514 கிலோ (0.6 டன்கள்) கொக்கைன் பறிமுதல் செய்யப்பட்டது. இதன் சர்வதேச மதிப்பு ரூ.600 கோடி ஆகும். அதனுடன், உலோக பெட்டிகளில் மறைத்து வைத்து, வர்த்தக விமானங்களில் உலகம் முழுவதும் இதுபோன்று 7 டன்கள் அளவிலான போதை பொருட்களை அவர்கள் கடத்திய அதிர்ச்சி விவரம் வெளிச்சத்திற்கு வந்தது.

இந்த தம்பதி இருவருக்கும், விமான நிறுவனம் மற்றும் சரக்கு தொழிலில் முன் அனுபவம் இருந்துள்ளது. இவர்கள் ஹீத்ரோ விமான நிலையத்தில் பணியாற்றி உள்ளனர். அதனை அடிப்படையாக கொண்டு அவர்கள் இந்த போதை பொருள் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு இருக்க கூடும் என என்.சி.ஏ. கூறுகிறது.

இந்த குற்றச்சாட்டுகளை அவர்கள் மறுத்தபோதிலும், நடந்த விசாரணையின் முடிவில் அவர்கள் குற்றவாளி என அறிவிக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக இருவருக்கும் தலா 33 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி எட்வார்டு கான்னெல் உத்தரவிட்டு உள்ளார்.

# அபுதாபியில் முதல் இந்து கோயில்
## பிப்.14ல் திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி



**அபுதாபி : பிப். 2,**

**அபுதாபியில் கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான இந்து கோயிலை பிரதமர் மோடி வரும் 14ம் தேதி திறந்து வைக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.**

அபுதாபி முரேகாவில் மிக பிரம்மாண்டமான முறையில் இந்து கோயில் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. 27 ஏக்கரில் ரூ.888 கோடி செலவில் கட்டப்படும் இக்கோயில் அபுதாபியில் கட்டப்படும் முதல் இந்து கோயிலாகும். உலகம் முழுவதும் சுமார் 1,200 இந்து கோயில்களை நிறுவி, பராமரித்து வரும் பாப்ஸ் அமைப்பு அபுதாபி கோயிலை கட்டி வருகிறது.

இக்கோயிலில் கிருஷ்ணன், சிவன், ஐயப்பனின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளன. இக்கோயில் கட்டுமான பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. இதன் திறப்பு விழா வரும் பிப்ரவரி 14ம் தேதி நடைபெறும் என்று ஏற்கெனவே கோயில் கட்டுமான குழுவின் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை தொடர்ந்து தற்போது அபுதாபியில் கட்டப்பட்டுள்ள இந்து கோயிலையும் பிரதமர் மோடி திறந்து வைக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மோடி வரும் 13 மற்றும் 14ம் தேதி ஐக்கிய அரபு அமீரகத்திற்கு பயணம் மேற்கொள்ள உள்ளார். இதற்கான அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், பிரதமர் மோடியை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் அங்கு தடபுடலாக நடக்கின்றன.

பயணத்தின் முதல் நாளான 13ம் தேதி அபுதாபி ஷேக் சயீத் மைதானத்தில் நடைபெறும் அஹ்லான் மோடி (ஹலோ மோடி) எனும் நிகழ்ச்சியில் இந்திய சமூகத்தினர் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்ற உள்ளார். இதில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதைத் தொடர்ந்து, 14ம் தேதி முரேகாவில் கட்டப்பட்டுள்ள இந்து கோயிலை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். இதனால் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

மோடியை வரவேற்கவும், கோயில் திறப்பு விழாவில் அவருக்கு சிறப்பான முக்கியத்துவம் அளிக்கவும் அபுதாபி அரசு மற்றும் கோயில் நிர்வாகம் சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

# ரஷ்ய அதிபராக 6 ஆண்டுகளில்
## ஒரு மில்லியன் டாலர் சம்பாதித்த விளாதிமிர் புதின்



**மாஸ்கோ : பிப். 2,**

**ரஷ்யாவின் அதிபராக 6 ஆண்டு காலத்தில் விளாதிமிர் புதின் 1 மில்லியன் டாலருக்கும் குறைவாகவே சம்பாதித்துள்ளதாக தேர்தல் ஆணைய ஆவணங்களை மேற்கோள்காட்டி நியூஸ் வீக் தெரிவித்துள்ளது.**

வரும் மார்ச் மாதம் ரஷ்ய அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளதையொட்டி தான் சம்பாதித்த சொத்துகள் குறித்தவிவரங்களை ரஷ்ய தேர்தல் ஆணையத்திடம் புதின் தாக்கல் செய்துள்ளார். அதில், ரஷ்ய அதிபராக 2018 முதல் 2024 வரையிலான 6 ஆண்டு காலத்தில் 67.6 மில்லியன் ரூபிள் அதாவது 7,53,000 டாலர் புதினுக்கு வருவாயாக கிடைத்துள்ளது. இதில், வங்கி வைப்புத் தொகை, அவரது ராணுவ ஓய்வூதியம் மற்றும் சொத்து விற்பனையின் வாயிலாககிடைத்த பணமும் அடங்கும்.

இதற்கு நேர்மாறாக, அமெரிக்க அதிபரின் ஓராண்டு வருமானமே 4 லட்சம் டாலராக உள்ளது கவனிக்கத்தக்கது. கடந்த 2000-ம் ஆண்டு முதல்2 தசாப்தங்களாக ரஷ்ய அதிபராக புதின்கோலோச்சி வருகிறார். இந்நிலையில், வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலிலும் புதின் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவின் மத்திய தேர்தல் ஆணையம் கூறுகையில், "புதினுக்கு 10 வெவ்வேறு வங்கி கணக்குகளில் 54.5 மில்லியன் ரூபிள் (6,06,000 டாலர்) சேமிப்பு உள்ளது. பழங்கால கார்களும் அவரிடம் உள்ளன.

மேலும், ரஷ்ய அதிபருக்கு மாஸ்கோவில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பும், செயின்ட்பீட்டர்ஸ்பர்க்கில் ஒரு அப்பார்ட்மெண்ட் மற்றும் ஒரு கேரேஜும் உள்ளதுஎன தெரிவித்துள்ளது. பின்லாந்தையொட்டிய ரஷ்ய எல்லைக்கு அருகில் புதினுக்கு ரகசிய குடியிருப்பு ஒன்று உள்ளதாக மாஸ்கோ டைம்ஸ் ஆவணங்களை மேற்கோள்காட்டி கூறியுள்ளது.

ரஷ்ய அரசியலமைப்பு சட்டத்தில் கடந்த 2020-ம் ஆண்டு சர்ச்சைக்குரிய வகையில் செய்யப்பட்ட திருத்தத்தைத் தொடர்ந்து, 71 வயதான புதின் 2036-ம் ஆண்டு வரை அதிபர் பதவியில் நீடிக்கவழிவகை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் பொது தேர்தல் வேட்பாளர் சுட்டு கொலை : உதவியாளர்கள் 4 பேர் காயம்



**காபூல் : பிப். 2,**

**ஊழல் வழக்கு ஒன்றில், இம்ரான் கான் மற்றும் அவருடைய மனைவி பூஷ்ரா ஆகியோருக்கு, 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.**

பாகிஸ்தானில் பிப்ரவரி 8-ந்தேதி பொது தேர்தல் நடைபெற உள்ளது. இந்த சூழலில், பாகிஸ்தானை ஒட்டிய ஆப்கானிஸ்தான் எல்லை பகுதியில் உள்ள பஜார் என்ற பழங்குடியின மாவட்டத்தில் சுயேட்சை வேட்பாளரான ரெஹான் ஜெப் கான் என்பவரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர்.

இவருக்கு, முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் கட்சி ஆதரவு வழங்கப்பட்டு இருந்தது என கூறப்படுகிறது. அவருடன் இருந்த 4 உதவியாளர்களும் சுடப்பட்டனர். இதில், ஜெப் கான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது அதில், பலனின்றி உயிரிழந்து விட்டார். அவருடைய உதவியாளர்கள் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். ஊழல் வழக்கு ஒன்றில், இம்ரான் கான் மற்றும் அவருடைய மனைவி பூஷ்ரா ஆகியோருக்கு, 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. இந்த சூழலில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

இந்ததாக்குதலுக்குயாரும் பொறுப்பேற்கவில்லை. எல்லை பகுதியின் இருபுறத்திலும் இஸ்லாமிய பயங்கரவாதிகள் உள்ளனர். எனினும், தாக்குதலை நடத்தியது யார் என்று தெரிய வரவில்லை. பாகிஸ்தான் நாட்டின் பலூசிஸ்தான் மாகாணத்தில் குவெட்டா நகரில், பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியை சேர்ந்த தொண்டர்கள் சிலர் கடந்த செவ்வாய்கிழமை பேரணி ஒன்றை நடத்தினர். அக்கட்சியின் கொடியை ஏந்தியபடி, பைக்குகளில் அவர்கள் ஊர்வலம் சென்றனர். அப்போது, யாரும் எதிர்பாராத வகையில், திடீரென குண்டுவெடிப்பு நடந்தது.

இந்த சம்பவத்தில், அக்கட்சியை சேர்ந்த தொண்டர்கள் 3 பேர் உள்பட 4 பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

# லடாக்கில் அத்துமீறிய சீன ராணுவம் கற்களை வீசி விரட்டியடித்த கிராமவாசிகள்



**இந்தியா : பிப். 2,**

**இந்தியாவின் லடாக் பகுதியில் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்த கிராம வாசிகளை சீன ராணுவத்தினர் அச்சுறுத்தினர். அவர்களை, கிராம வாசிகள் கற்களை வீசி விரடியடித்த தீரமானசம்பவம்நடந்துள்ளது.**

இந்தியாவின் லடாக் யூனியன் பிரதேசம் சீன எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. லடாக்கின் சுசுல் பள்ளத்தாக்கில் உள்ள நியோமா கிராமம் துங்டி பகுதியை சேர்ந்த மக்கள், எல்லைப் பகுதியில் உள்ள காக்ஜங் பகுதிக்கு கால்நடைகளைமேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றனர்.

அப்போது அங்கு வாகனங்களில் வந்த சீன ராணுவத்தினர், "இதுசீனாவின் இடம், இங்கு வரக்கூடாது" என கூறி, இந்திய கிராமவாசிகளை மிரட்டியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த கிராம வாசிகள் "நீங்கள் இங்கு வந்தது ஏன்?. இது எங்களது பாரம்பரிய இடம். காலம் காலமாக கால்நடைகளை இங்குதான் மேய்ச்சலுக்கு அழைத்து வருகிறோம்" என ஆவேசத்துடன் கூறினர். மேலும், சீன ராணுவத்தினர் மீது கற்களை வீசி தாக்கினர். இதையடுத்து சீன ராணுவத்தினர் அங்கிருந்து திரும்பிச் சென்றுவிட்டனர்.

இந்த சம்பவம் குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவிவருகிறது. அதில், 6 முதல் 8 பேர் வரையிலான சீன ராணுவ வீரர்கள், ஒரு போர் வாகனத்தில் சைரன் ஒலி எழுப்பிவருவதும், அங்கு கால்நடை மேய்த்துக் கொண்டிருந்த லடாக் கிராம வாசிகளை அச்சுறுத்தும் காட்சிகளும் உள்ளன.

இந்நிலையில், ராணுவ தலைமை தளபதி மனோஜ் பாண்டே கூறுகையில், "லடாக்கில் சூழல் நிலையாக உள்ளது. அங்கு ராணுவத்தின் செயல்பாடு உச்சபட்ச தயார் நிலையில் உள்ளது. எல்லை பிரச்சினைகளைத் தீர்க்க ராணுவம் மற்றும் ராஜாங்க மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

# 4 வயது குழந்தையை கொன்றதாக தாய் கைது துயரத்தில் குடும்பத்தினர்



**லிபோர்னியா : பிப். 2,**

**அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 4 வயது குழந்தையை தாயே கொலை செய்துள்ள அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.**

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 4 வயது குழந்தையை தாயே கொலை செய்துள்ள அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது. இந்ததாய், இறந்த தனது மகளின் சடலத்தினை வெகுநாட்கள் தனது காரில் வைத்து சுற்றி வந்துள்ளார் என விசாரணையை மேற்கொண்ட அதிகாரிகள் சந்தேகித்துள்ளனர்.

குழந்தையை கொன்றதாக கைதுசெய்யப்பட்ட அப்பெண் கலிபோர்னியாவை சேர்ந்த மரியா அவலோஸ் (38). இவரின் மகள், கொலை செய்யப்பட்ட மியா கோன்சாலஸ் (4). கிழக்கு லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் கார் ஒன்றில் குழந்தை மியாவின் சடலத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார் மரியா. அப்போது அக்குழந்தை பேச்சு மூச்சின்றி இருந்துள்ளார். சந்தேகத்தில் காவல்துறையினர் விசாரித்தபோதுதான் உண்மை தெரியவந்துள்ளது. கொடூரமான குற்றம் என்ற அடிப்படையில், மரியா உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து குழந்தை மியாவின் தந்தை தெரிவிக்கையில், "கடந்த சில வாரங்களாகவே மரியா பல பிரச்னைகளை எதிர்கொண்டு வருகிறார். இதில் ஏற்பட்ட மனக்கசப்பில், கடந்த சில வாரங்களுக்கு முன்பே மியாவைதன்னோடு அழைத்து சென்றுவிட்டார் அவர்" என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் தான் குழந்தையோடு தொடர்பில் இல்லை என அவர் தெளிவுபடுத்தியிருப்பதாக தெரிகிறது.

குழந்தை மியா குறித்து குடும்பத்தினர் தெரிவிக்கையில், "மியாமிகவும் நல்ல குழந்தை. எங்கள் வீட்டின் வெளிச்சம் அவள். அவளுக்கு இப்படி நடந்திருக்கக்கூடாது; இப்படியான இறப்பு அவளுக்கு நேர்ந்திருக்கவே கூடாது. உண்மையில் நாங்கள் மரியாவை கடந்த சில தினங்களாகவே தொடர்பு கொள்ள முயற்சி செய்தோம். அவள்தான் மன அழுத்தத்தில் இருப்பதாக சொல்லி பேச மறுத்துவிட்டாள். இப்போது சிறையிலிருந்து எங்களை அழைக்கிறாள். இனி என்ன வேண்டும் அவளுக்கு?" என்று வேதனையோடு பேசியுள்ளனர்.

மேலும் குழந்தையின் இறப்பிற்கான காரணத்தினை சோதித்த மருத்துவர் தெரிவிக்கையில், "குழந்தையின் கழுத்து நெரிக்கப்பட்டு, மணிக்கட்டில் தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டுள்ளது. அதில்தான் அவர் உயிரிழந்துள்ளார்" என்று தெரிவித்தார். குழந்தையை கொன்றதாக சந்தேகத்தின் பெயரில் தாய் கைது செய்யப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ரஷியா – உக்ரைன் இடையே போர்க்கைதிகள் பரிமாற்றம்



**ரஷியா : பிப். 2,**

**உக்ரைன்மீதுரஷியாபோர் தொடங்கிஇரண்டுஆண்டுகள் முடிவடைய இருக்கிறது. இரு நாடுகளும் மிகப்பெரிய அளவில் சேதங்களை எதிர்கொண்டுள்ளன. என்றபோதிலும் போர் நிறுத்தத்திற்கான வாய்ப்பு இன்னும் ஏற்படவில்லை.**

போர் நிறுத்தம் என்பது ரஷியாவுக்கு சாதகமானது என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்து வருகிறார். உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆயுதங்கள் வழங்கி வருகின்றன. ரஷியாவுக்கு சீனா மற்றும் வடகொரியா ஆகியவை மறைமுகமாக ஆயுதங்கள் கொடுத்து வருகின்றன. இதனால் தற்போதுகூட மாறிமாறி தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் ரஷியாவின் போர் விமானம் போர்க்கைதிகளை ஏற்றிக்கொண்டு செல்லும்போது சுட்டு வீழ்த்தப்பட்டது. உக்ரைன்தான் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக குற்றம்சாட்டியது. விமானத்தில் 77 பேர் இருந்ததாக கூறப்படுகிறது. அதில் ஆறுவிமான ஊழியர்கள் மற்றும் மூன்று ரஷிய வீரர்கள் இருந்ததாக கூறப்படுகிறது. இந்தசர்ச்சை பெரிதாகவெடித்த நிலையில் போர்க்கைதிகளை மாற்றிக்கொள்ள இருதரப்பிலும் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாக தெரிகிறது.

இந்தநிலையில் 195 போர்க்கைதிகள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டதாக ரஷியாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் கைதிகள் பரிமாற்றம் நடைபெற இருந்தது. ஆனால், அது நிறுத்தப்பட்டது என உக்ரைன் தெரிவித்துள்ளது.

# சீர்காழியில் பள்ளி இலக்கியமன்ற விழா



சீர்காழி.பிப்,2

சீர்காழி பெஸ்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 39-ம் ஆண்டு இலக்கியமன்ற விழா & பன்முகத் திறன் போட்டிகளுக்கான நிறைவு விழா - விஜய் டிவி புகழ் அருணா பங்கேற்பு:

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பெஸ்ட் மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் 39-ம் ஆண்டு இலக்கிய மன்ற விழா மற்றும் மாணவ மாணவிகளுக்கான பன்முக திறன் போட்டிகள் பள்ளியின் தாளாளர் ராஜ்கமல் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விஜய் டிவி புகழ் சூப்பர் சிங்கர் செல்வி அருணா கலந்து கொண்டு மாணவர்களுக்கிடையே சிறப்புரை ஆற்றினார். மேலும் குழந்தை வளர்ப்பதின் விதம் குறித்து பெற்றோரிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு பல்வேறு பன்முகத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நினைவு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது. .

# கன்னட பெயர் பலகை – அவசர சட்டத்தை நிராகரித்த கர்நாடக ஆளுநர் தாவர்சந்த்

பெங்களூரு : பிப். 2-



கர்நாடகாவில் கன்னட ரக் ஷனவேதிகே அமைப்பினர், கன்னடத்தில் பெயர் பலகை வைக்காத வர்த்தக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை அடித்து நொறுக்கினர்.

இதையடுத்து கர்நாடக அரசுகடந்த 5-ம் தேதி வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளில் 60 சதவீதம் கட்டாயம் கன்னடத்தில் எழுதி இருக்க வேண்டும் என அவசரச் சட்டம் கொண்டுவந்தது. மேலும், பிப்ரவரி 28-ம் தேதிக்குள் கன்னடத்தில் பெயர் பலகை வைக்காத நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் உத்தரவிட்டது. கர்நாடக அரசு கொண்டு வந்த அவசரச் சட்ட மசோதாவுக்கு அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல்பெறப்பட்டது.

இந்த அவசர சட்டத்துக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் தாவர்சந்த் கெலாட் நிராகரித்துள்ளார். மேலும் இதை சட்டப்பேரவையில் நிறைவேற்றுமாறு திருப்பி அனுப்பியுள்ளார். இதற்கு காங்கிரஸாரும், கன்னட அமைப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார் கூறுகையில், "கர்நாடகாவின் முதன்மையான பிரச்சினையை புரிந்துக் கொள்ளாமல் ஆளுநர் தவறான முடிவை எடுத்துள்ளார். இந்தப் பிரச்சினை கர்நாடகாவின் கவுரவம் சார்ந்தது என்பதால் ஆளுநர் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்றார்.

# வளசரவாக்கம் அகத்தீஸ்வரர் கோயில் தெப்பக்குளம் ரூ.2.99 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணி

## அமைச்சர் சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்

சென்னை,பிப்,2



சென்னை, வளசரவாக்கத்தில் உள்ள அகத்தீஸ்வரர் வேள்விஸ்வரர் திருக்கோயில் தெப்பக்குளம் ரூ 2.99 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகளுக்கான தொடக்க விழா 1.2.2024 இன்று காலை கோயில் வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மதுரவாயல் எம் எல் ஏ காரப்பாக்கம் கணபதி தலைமை தாங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முரளிதரன், இணை ஆணையர் ரேணுகாதேவி, மண்டல குழு தலைவர் நொளம்பூர் ராஜன், கோயில் அறங்காவலர் குழு தலைவர் மதியழகன், மாமன்ற உறுப்பினர் பாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதையடுத்து சீரமைக்கப்பட உள்ள குளத்தின் அருகே அதற்கான பூமி பூஜை நடைபெற்றது.

இதில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டினார். இதனைத் தொடர்ந்து கோயில் வளாகத்தில் திருப்பணி கல்வெட்டினை திறந்து வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது : 776 ஆண்டுகள் பழமை வாய்ந்த அகத்தீஸ்வரர் மற்றும் வேள்விஸ்வரர் கோவில்களுக்கு சொந்தமான இடத்தில் திருக்குளம் அமைக்கின்ற பணி ஐந்தாண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்தது. இந்த பணிக்கு இன்று 2 கோடியே 99 லட்சம் செலவில் திருக்குளம் பணியை துவக்கி வைக்கின்ற பணி தொடங்கியுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பதவியேற்ற பிறகு 1339 கோவில்களுக்கு குடமுழுக்கு நடந்துள்ளது. இன்று மட்டும் 13 கோவில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டு கொண்டிருக்கிறது. இந்த கோவிலுக்கு 1.50 கோடி செலவில் திருப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சியில் மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ.5572 கோடியாக உள்ளது.

பல்வேறு கோயில்களில் நான்கு புதிய குளங்கள் 4 கோடியே 41 லட்சம் செலவில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 122 குளங்கள் ரூ.78 கோடியே 44 லட்சத்தில் மேம்படுத்தப்படும் பணிகள் நடந்து வருகிறது. 18,788 திருப்பணிகள் ரூ. 4157 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்து சமய அறநிலையத்துறையில் புரட்சி என்று சொல்லலாம்.

நடக்கின்ற திருப்பணிகளில் மூன்றில் ஒரு பங்கு பணிகள் உபயதாரர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் என்றால் இது நடக்கின்ற ஆட்சி மீது கொண்ட நன்மதிப்பை காட்டுகிறது. அவர்கள் அளிக்கின்ற நிதி முறையாக செலவிடப்படுகிறது. தமிழகத்திற்கு நிதி தேவை அதிகமாக உள்ளது. கொரோனா புயல் சீற்றத்தால் தமிழகத்திற்கு அதிகமான நிதி கோரி இருந்தோம். மிக்ஜாம் புயலுக்கும் எந்தவிதமான நிதியும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கவில்லை. தற்போது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ள பட்ஜெட்டிலாவது தமிழகத்திற்கு தேவையான அதிகமான நிதியும் அதிக திட்டத்தையும் ஒதுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

# மனிதர்களை மதம் சார்ந்து பிளவு படுத்தும் தீர்ப்பு : உடனடியாக தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் – முத்தரசன் கோரிக்கை

சென்னை :பிப்.2,இந்து சமய கோவில்களில் இந்து சமயம் சாராதவர்களை அனுமதிக்கக்கூடாது என தீர்ப்பு குறித்து உடனடியாக மேல்முறையீடு செய்ய வேண்டும் என இந்திய கம்னியூஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரைக் கிளை கடந்த செவ்வாய்க்கிழமை இந்து சமய கோவில்களில் இந்து சமயம் சாராதவர்களை அனுமதிக்கக்கூடாது என தீர்ப்பு வழங்கியுள்ளது. இது தமிழ்நாட்டில் சமய எல்லைகள் கடந்து அனைத்து சமய நம்பிக்கைகளையும் சமமாக கருதியும், மதித்தும் வருகிற நல்லிணக்க பண்புக்கு எதிரானது.

நாகூர் தர்க்காவிலும், அன்னை வேளாங்கன்னி தேவாலயத்திற்கும், பழநி திருக்கோவிலுக்கும், அனைத்து சமய நம்பிக்கை உள்ளவர்களும் சென்று வருவது வழிவழியான பழக்கமாக உள்ளது. இதன் மூலம் சமய வழிகள் வேறுபட்டாலும் எல்லா சமயங்களும் அன்பு, கருணை, இரக்கம் சகிப்புத் தன்மை என நல்லிணக்க உணர்வை தான் போதிக்கிறது என வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்த சுவாமி விவேகானந்தர், வள்ளலார், இராமானுஜர் போன்ற சமய சான்றோர்கள் போதித்தும் வாழ்ந்தும் காட்டியுள்ளனர். இந்த ஆன்மிக வரலாற்று மரபுகளை கருத்தில் கொள்ளாமல் உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கியுள்ள தீர்ப்பு சமூகத்தில் பகைமை வளர்க்கும் பிளவு சக்திகளை ஊக்கப்படுத்தும் பேராபத்தானது.

எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் இத்தீர்ப்பை வழங்கிய நீதியரசர் மறுபரிசீலனை செய்து தீர்ப்பை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்துவதுடன் இந்து சமய அறநிலையத் துறையும், தமிழ்நாடு அரசும் இத்தீர்ப்பை செயல்இழக்கசெய்ய உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

## "ஹேமந்த் சோரன் கைது

# பாஜகவின் பழங்குடியினருக்கு எதிரான நடவடிக்கை மற்றும் ஜனநாயக விரோதச் செயல்" – அகிலேஷ் யாதவ் சாடல்

பாட்னா:பிப்.2, ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டிருப்பதற்கு கண்டனம் தெரிவித்துள்ள சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், "இது பாஜகவின் பழங்குடியினருக்கு எதிரான நடவடிக்கை மற்றும் ஜனநாயக விரோதச் செயல்" என்று விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அகிலேஷ் யாதவ் நேற்று கூறியிருப்பதாவது: "ஜார்க்கண்ட் ஒருபோதும் அடிபணியாது. அம்மாநிலத்தில் பாஜகவினுடைய பழங்குடியினருக்கு எதிரான முகம் வெளிவரத் தொடங்கிவிட்டது. ஜார்க்கண்டின் துணிச்சல் மிக்க போர்வீரன் ஹேமந்த் சோரன். அவர் பாஜகவின் ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் முதலாளித்துவ வாதிகளிடமிருந்து பழங்குடிகள் மற்றும் பழங்குடிகளின் பகுதிகளை பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் ஒரு தடுப்புச்சுவர் போல செயல்பட்டார். அதனால் ஜார்க்கண்ட் சுரண்டலில் இருந்து பாதுகாக்கப்பட்டது. இதனாலேயே அவர்கள் மோசமாக நடத்தப்பட்டனர். இது ஜார்க்கண்ட் மக்களின் எண்ணங்களை அவமதிக்கும் செயல். அதனால் ஜார்க்கண்ட்வாசிகள் இந்தமுறை பாஜகவுக்கு எதிராக வாக்களிப்பார்கள், பாஜக ஒரு வரலாற்றுத் தோல்வியைச் சந்திக்கும்.

உண்மையில் பணவீக்கம், வேலையில்லா திண்டாட்டம், ஊழல் ஆகிய பெரிய பிரச்சினைகளுக்கு முன்னால் தான் தோல்வியடைந்து விட்டதாக பாஜக கருதுகிறது. அதனால்தான் அரசுகளை கவிழ்ப்பதன் மூலமாக தங்களின் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். அதற்காக சில இடங்களில் குறிப்பிட்ட முதல்வர்களை கைது செய்கிறார்கள், சில இடங்களில் போலி வாக்குச்சீட்டுகளை பயன்படுத்துகிறார்கள்.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தார்மீக ரீதியாக தோல்வியடைந்து விட்டது. அரசியல் ரீதியான அதன் தோல்வி மட்டும் தான் இன்னும் அறிவிக்கப்படவில்லை. பாஜகவின் சில ஜனநாயக விரோத நடவடிக்கைகளால், முன்பு பாஜகவுக்கு வாக்களித்தவர்களும் இம்முறை மனம் மாறியுள்ளனர்.

நாங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும் பிடிஏவில், பழங்குடி சமூகமும், பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் சமூகத்தினர், சிறுபான்மையினர் மற்றும் நாட்டின் பாதி மக்கள் தொகையினர் அதாவது பெண்கள், ஒடுக்கப்பட்டவர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். பாஜக பிடிஏவுக்கு எதிரானது. மொத்தத்தில் பிடிஏ என்பது இந்த நாட்டின் 90 சதவீத மக்களின் ஒற்றுமைக்கான பெயர். இந்த ஒற்றுமையைப் பார்த்து பாஜக பயந்துள்ளது. நம்மை பிரிப்பதற்காக சோதனை மற்றும் கைது நடவடிக்கைகள் மூலம் அச்சமூட்ட நினைக்கிறது". என்று தெரிவித்துள்ளார்.

# கூட்டணி தர்மத்தை சமாஜ்வாதி பின்பற்றவில்லை : காங்கிரஸ் கடும் எதிர்ப்பு

புதுடெல்லி : பிப். 2, எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணியில் காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன.



இந்நிலையில் உ.பி. யில் மொத்தமுள்ள 80 மக்களவைத்தொகுதிகளில் காங்கிரஸுக்கு 11 தொகுதிகளை ஒதுக்குவதாக சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் கடந்த வாரம் அறிவித்தார். இதையடுத்து 16 வேட்பாளர்கள் கொண்ட முதல் பட்டியலை சமாஜ்வாதி செவ்வாய்க்கிழமை வெளியிட்டது.

இதுகுறித்து உ.பி. காங்கிரஸ் பொறுப்பாளர் அவினாஷ் பாண்டே நேற்று முன்தினம் புதன்கிழமை கூறியதாவது: சமாஜ்வாதி கட்சி கூட்டணி தர்மத்தை பின்பற்றவில்லை; கூட்டணியில் ஒருதலைப்பட்சமான அறிவிப்புகளை அக்கட்சி வெளியிடுகிறது. சமாஜ்வாதி வெளியிட்ட பட்டியலில் காங்கிரஸ் உரிமை கோரும் பல இடங்கள் உள்ளன. காங்கிரஸ் எப்போதும் வலுவாக உள்ளது, வரும் ஆண்டுகளில் ஒரு பெரிய சக்தியாக காங்கிரஸ் உருவெடுப்பதை காண்பீர்கள்.

சமாஜ்வாதி கட்சியோ அல்லது வேறு எந்தக் கட்சியோ காங்கிரஸுக்கு சீட் கொடுத்ததாகச் சொன்னால் அது நகைப்புக்குரியது. கூட்டணியில் ஒருதலைப்பட்சமான முடிவுகளுக்கு இடமில்லை. அனைத்து கட்சிகளும் ஒன்றுகூடி கூட்டாக இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிட வேண்டும் என்று அவினாஷ் பாண்டே கூறினார்.

# ஸ்பெயின் நாட்டின் ஹபக் லாய்டு நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.2,500 கோடி முதலீடு, 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு



சென்னை : பிப். 2, சரக்கு முனையங்கள் மற்றும் சரக்கு கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹபக் லாய்டு நிறுவனத்துடன் 2500 கோடி ரூபாய் முதலீட்டில், 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் தூத்துக்குடி மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தளவாட வசதிகள் அமைத்திட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழக அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள வலியுறுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் பரவலான தொழில் வளர்ச்சிக்கு சரக்கு போக்குவரத்தினை திறமையாகக் கையாளுவது மிகவும் அவசியமானதாகும். தமிழ்நாட்டில் உள்ள நான்கு பெரும் துறைமுகங்களைப் பயன்படுத்தி, சரக்குகளைக் கையாளும் கண்டெய்னர் துறைமுகங்கள், சரக்குப் போக்குவரத்துபூங்காக்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாட்டில் அமைத்திட பல்வேறு முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகின்றது. இத்துறைக்கான தனிக்கொள்கை ஒன்றும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், சரக்கு முனையங்கள் மற்றும் சரக்கு கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமாக திகழக்கூடிய ஹபக் லாய்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் Jesper Kanstrup மற்றும் இயக்குநர் Albert Lorente ஆகியோரை முதல்வர் ஸ்டாலின் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்துப் பேசினார்.

இந்தசந்திப்பின்போது, தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து தமிழ்நாடு முதல்வர் எடுத்துரைத்து, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில், 2500 கோடி ரூபாய் முதலீட்டில், தூத்துக்குடி மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தளவாட வசதிகள் அமைத்திட இந்நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சரின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இம்முதலீடு 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, தமிழ்நாட்டின் எதிர்கால தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

அதனைத்தொடர்ந்து, சாலை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனமான அபர்ட்டிஸ் நிறுவனத்தின் Laura Berjano, International and Institutional Relations Head, தமிழ்நாடு முதல்வரை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, இந்தியாவிலேயே அதிகமான சாலை அடர்த்தியும், தரமான சாலை கட்டமைப்பும் தமிழ்நாட்டில் உள்ளன என்பதையும், தொழில்வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இந்த சாலை கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தி, அபர்ட்டிஸ் நிறுவனம் தமிழ்நாட்டின் சாலைக் கட்டமைப்பில் மேலும் முதலீடு செய்ய வேண்டும் என்று முதல்வர் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் மாநில நெடுஞ்சாலை கட்டமைப்பில் முதலீடுகளை மேற்கொள்ளவும் அபர்ட்டிஸ் நிறுவனம் ஆர்வம் தெரிவித்துள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

## மாநில அளவிலான பள்ளி மாணவர்களின் அறிவியல் கண்காட்சியில்

# வெற்றி பெற்றவர்களுக்கு டி.ஜெ.எஸ் கல்விக்குழுமத்தின் மேலாண்மை இயக்குனர் டி.ஜெ.ஆறுமுகம் பரிசு வழங்கினார்

ஊத்துக்கோட்டை, பிப்2-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயல் பகுதியில் டி.ஜெ.எஸ் இன்ஜினியரிங் கல்லூரி இயங்கி வருகிறது. இந்நிலையில், இக்கல்லூரி வளாகத்தில் டி.ஜெ.எஸ் இன்ஜினியரிங் கல்லூரி மற்றும் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து மாநில அளவிலான பள்ளி மாணவர்களின் 2 நாட்கள் அறிவியல் கண்காட்சியை நடத்தினர்.





இந்நிகழ்ச்சிக்கு, டி.ஜெ.எஸ் கல்விக்குழுமத்தின் தலைவரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வி நெறி காவலர் டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். கல்விக் குழுமத்தின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜெ.ஆறுமுகம், கல்விக் குழுமத்தின் துணைத் தலைவர் டி.ஜெ. தேசமுத்து, டி.ஜெ. எஸ் கல்வி குழுமத்தின் இயக்குனர் கபிலன், டி. ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியின் தாளாளர் டாக்டர் பழனி, டி.ஜெ.எஸ் பப்ளிக் பள்ளியின் தாளாளர் சமூக நற்பணி செம்மல் டி.ஜெ.எஸ்.ஜி.தமிழரசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த அறிவியல் கண்காட்சியில் 55 பள்ளிகளைச் சேர்ந்த 582 மாணவர்கள் தங்களது படைப்புகளை காட்சிப்படுத்தினர். இதில், 216 படைப்புகளை காட்சிப்படுத்தினர். இந்த அறிவியல் கண்காட்சியை டி.ஜெ. எஸ் கல்விக்குழுமத்தின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜெ. ஆறுமுகம் துவக்கி வைத்து பார்வையிட்டார். இக்கண்காட்சியை 41 பள்ளிகளைச் சேர்ந்த 3,492 மாணவர்கள் பார்வையிட்டனர்.

இதில், சூரப்பட்டு வேலம்மாள் வித்யாஷ்ரம் பள்ளி மாணவர் காட்சிப்படுத்திய ரோபோடிக் ஆர்ம் முதல் பரிசு பெற்றது. இதற்கு ரூ.20,000-ம் ரொக்கப்பரிசு ஆகும். இரண்டாம் பரிசை திருவெற்றியூர் ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் காட்சிப்படுத்திய பிளாஸ்மாபால் பெற்றது. இதற்கு ரூ.15,000-ம் ரொக்கப் பரிசு ஆகும். மூன்றாம் பரிசை திருநின்றவூர் செயின்ட் ஜோசப்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் காட்சிப்படுத்திய ராக்கெட் சயின்ஸ் பெற்றது. இதற்கு ரூ.10,000-ம் ரொக்க பரிசு ஆகும். முதல்மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கும் பல்வேறு சிறந்த படைப்புகளை காட்சிப்படுத்திய மாணவர்களுக்கும் சான்றிதழ்கள், ரொக்க பரிசு உள்ளிட்டவைகளை டி.ஜெ.எஸ் கல்விக்குழுமத்தின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜெ.ஆறுமுகம் வழங்கி பாராட்டி பேசினார். '

இந்நிகழ்ச்சியில், இயக்குனர்கள் விஜயகுமார், தினேஷ் உறுப்பினர்கள் சண்முகசுந்தரம், ஜெயக்குமார், ராஜேஷ், கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் வி.லட்சுமிபதி, டி.ஜெ. எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியின் முதல்வர் பி.ஞானப்பிரகாசம், நிர்வாக அதிகாரி எஸ்.ஏழுமலை, துறை தலைவர்கள் டாக்டர் இ.சிவக்குமார், டாக்டர் எஸ்.வேல்முருகன், ஜே.ஆக்னிஸ், எம். சண்முகசங்கரி மற்றும் இருபால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர் முன்னதாக அனைவரையும் டி.ஜெ. எஸ் இன்ஜினியரிங் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெ.பிரகாஷ் வரவேற்றார். முடிவில், துறை தலைவர் டாக்டர் எஸ்.அர்ஜுனன் நன்றி கூறினார்.


# இந்தியப் பொருளாதாரம் ஆழமான நேர்மறையான மாற்றத்தைக் கண்டுள்ளது





# மக்களவைத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டி பாமக பொதுக்குழு கூட்டத்தில் முடிவு

# சட்டப்பேரவையில் பிப்.12-ல் ஆளுநர் உரை பிப்.19-ல் தமிழக பட்ஜெட் தாக்கல்




| சென்னை / புதுக்கோட்டை | 02.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**வெ. அ. சுந்தரம்** , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், அரசியல்வாதி (பி.1896) (இ.1967)



**குஷ்வந்த் சிங்** , இந்திய ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி.1915) (இ.2014)



**சோ. கிருஷ்ணராஜா** , ஈழத்து மெய்யியலாளர், கல்வியாளர் (பி.1947) (இ.2009)



**உபுல் தரங்க** , இலங்கைத் துடுப்பாட்ட வீரர் (பி.1985)



## இன்றைய நினைவு நாள்

**தில்லையாடி வள்ளியம்மை**, இந்திய விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தென்னாப்பிரிக்கத் தமிழ்ப் பெண் போராளி (பி.1898) (இ.1914)



**மு. இராகவையங்கார்**, தமிழக ஆய்வாளர், பதிப்பாசிரியர், இதழாசிரியர், சொற்பொழிவாளர், கவிஞர் (பி.1878) (இ.1960)



**ப. சண்முகம்** , புதுச்சேரி மாநிலத்தின் 9வது முதலமைச்சர் (பி.1927) (இ.2013)



## உலக சதுப்பு நில நாள்